# PAPER I - UNIT I

## நவீனகால இந்திய வரலாறு மற்றும் இந்திய கலாச்சாரம் - II

## தேசத்தலைவர்கள்

# மகாத்மா காந்தி (1869-1948)

- மோகன்தாஸ் கரம் சன்காந்தி தேசத்தந்தை மற்றும் நவீன இந்தியாவின் சிற்பி ஆவார்.
- காந்தி ஒரு பாதுகாப்பாளர், சமூக பணியாளர், சமூக சீர்திருத்தவாதி, சிந்தனையாளர் மற்றும் விடுதலை வாங்கி தந்தவர்.
- காந்தி சமயப் பற்றாளர், மனிதநேயம் மிக்கவர் மற்றும் நடைமுறை கொள்கையாளர்.
- காந்தியின் கொள்கையில் வர்கமுறை, கர்மா, சத்தியம், அகிம்சை, சாம்பவா, சர்வோதையா மற்றும் தர்மம் அடிப்படையாக கொண்டது.
- காந்தியின் ஆளுமை உறுதியான பாதையின் மேல் உருவாக்கப்பட்டதுப் போல் இரக்கம், உண்மைத்தன்மை, பணிசெய்தல் மற்றும் தியாகம் செய்தல் அடிப்படையாக உருவாக்கப்பட்டவர்.

## ➢ காந்தியின் ஆரம்பக்கால வாழ்வு

- காந்தி அவர்கள் கரம்சந்த் காந்திக்கும், புத்திலிபாய்க்கும் மகனாக குஜராத்தில் உள்ள போர்பந்தர் என்ற இடத்தில் அக்டோபர் 2, 1869 –ல் பிறந்தார்.
- காந்தி ஆரம்பக் கல்வியை ராஜ்காட்டில் உள்ள ஆல்பிரட் உயர்நிலைப் பள்ளியில் படித்தார்.
- காந்தி போர் பந்தரில் உள்ள வியாபாரியான கோகல்தாஸ் மகானி என்பவரின் மகள் கஸ்துரிபாய் என்பவரை தனது பதிமூன்றாம் வயதில் திருமணம் செய்துக்கொண்டார். கஸ்துரிபாய்க்கும் அதே வயது.
- காந்தி வழக்கறிஞர் பட்டம் பெற செப்டம்பர் 4, 1888 ஆண்டு பல கஷடங்களுக்கு இடையில் லண்டன் சென்று படித்தார்.
- காந்தி லண்டனில் வழங்கறிஞராக இருக்கும் போதும் பயிற்சி செய்யும் போதும் பலகஷ்டப்பட்டார். அங்கு இவர் சைவ உணவுமுறை சங்கத்தின் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இந்தியாவிற்கு வந்த காந்திஜி வாழ்க்கை சிறப்பாக இல்லை காரணம் அவரால் சிறப்பாக வழக்கறிஞர் தொழில் செய்யமுடியவில்லை.
- எனவே காந்தி பம்பாய் சென்று உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராக பயிற்சி எடுத்தார்.

## ➢ தென்ஆப்பிரிக்காவில் காந்திஜி

- காந்திக்கு தென்ஆப்பிரிக்காவில் உள்ள அப்துல்லா என்பரின் வழக்குக்கு வாதாட அனுப்பப்பட்டார்.
- காந்தி நீதிமன்றத்திற்கு வழக்காட சென்றபோது தலப்பாய் அணிந்திருந்தார். எனவே, ஐரோப்பிய நீதிபதி காந்தியின் தலப்பாயை நீக்கிவிட்டு வழக்காட கூறினார். ஆனால் காந்தி மறுத்துவிட்டார்.
- காந்தி தென் ஆப்பிரிக்காவில் பிரட்டோரியா செல்ல ரயிலில் முதல் வகுப்பு டிக்கெட் பெற்று பயணம் செய்துக் கொண்டிருந்தார். தீடீர் என்று ஐரேப்பியர் இந்தியர். இதில் பயணம் செய்யக்கூடாது என்று கூறி காந்தியை ரயிலிலிருந்து இரக்கிவிட்டுவிட்டனர்.
- காந்தி தென் ஆப்பிரிக்காவில் இந்தியர் படும் துயரங்களைக் கலைய ஒரு சங்கம் உருவாக்கினார். அதன் மூலம் சட்டப்படி போராடிக் கொண்டு இருக்கும் போது அவர் எடுத்துக் கொண்ட அப்துல்லா தொடர்பாக வழக்கு முடிந்துவிட்டது.
- காந்தி இந்தியா திரும்பவேண்டி இருந்தது. ஆனால், தென்ஆப்பிரிக்காவில் உள்ள இந்தியர்களின் வேண்டுகோள் படி சிறிது காலம் அங்கு தங்கினார்.
- காந்தி நோட்டால் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக தன்னை பதிவுச் செய்துக் கொண்டு இந்தியாகளின் வழக்குகளில் வாதாடினார்.
- காந்தி நாட்டால் காங்கிரஸ் என்ற பெயரில் அமைப்பை உருவாக்கி அதன்மூலம் இந்திய சமூகம் முன்னேற பாடுபட்டார்.

 PH: 044-24339436, 42867555, 9840226187

## காந்தி இந்தியா வருதல்

- காந்தி 1901ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வந்தார். கல்கத்தாவில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் படும் துயரங்களை களைய வழிக்கான வேண்டி மாநாட்டில் தீர்மான கொண்டுவர காந்தி பாடுப்பட்டார்.
- 1902ஆம் ஆண்டு மீண்டும் தென் ஆப்பிரிக்கா சென்றார்.

## காந்தியின் செயல்பாடு

- தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு பம்பாய் வந்த காந்திக்கு துறைமுகத்தில் சிறப்பான வரவேற்ப்பு அளிக்கப்பட்டது.
- காந்தி சமுக பணி செய் முதலில் அகமதாபாத்தில் ஆசிரமம் அமைத்தார். பிறகு இடம் போதாததாலும், பிளேக் நோய் பரவியதாலும் ஆசிரமத்தை சபர்மதிக்கு மாற்றினர். இது 150 ஏக்கர் பரப்பளவு உள்ளது.

## காந்தியும் சாம்பிரான் போராட்டமும்

- பீகாரில் உள்ள சாம்பிரான் என்ற பகுதியில் ஐரோப்பியர்களால் அங்குள விவசாயிகளை இன்டிகொ என்ற சாயம் போட உதவும் செடியை பயிர் செய்ய கட்டாயப்படுத்தினர். இதை எதிர்த்து விவசாயிகள் போராட்டம் நடத்தினர். இதில் தான் ஜெகஜீவன்ராம் காந்தியை சந்தித்தனர்.
- காந்தி இப்போராட்டத்தில் கலந்துக் கொண்டு பிரச்சனையை தெளிவாக அரசுக்கு விளக்கி விவசாயிகளுக்கு உரிய நிவாரனம் பெற்று தந்தார். போராட்டமும் நடந்தது.

## காந்தியும் அகமதாபாத் மில் தொழிலாளர் போராட்டமும்

- தொழிலாளர் தன் போனஸ் பெற போராட்டம் நடத்தினர். காந்தி இதில் பங்கு பெற்று தொழிலாளர்களுக்காக போராடினர். பின்பு மில் முதலாளிகள் தொழிலாளரின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டனர்.

## காந்தி மற்றும் சர்தார் வல்லபாய் பட்டேல்

- பம்பாயில் காயிடா மாவட்டத்தில் சரியாக விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் சரியாக வரிக்கட்ட முடியவில்லை. ஆனால், அரசு வரியை கட்ட சொல்லி வற்புறுத்தியது.
- விவசாயிகள் போராட்டம் நடத்தினர். இதில் காந்தி மற்றும் வல்லபாய் பட்டேலும் கலந்துக் கொண்டு விவசாயிகளுக்காக போராடினார்கள்.
- சத்தியாகிரகப் போராட்டம் நடத்தினார்கள். பிறகு அரசு கட்டாய வரிவசூலை தளர்த்தியது.

## காந்தியும் அமிர்தசரஸ் படுக்கொலையும்

- ஆங்கில அரசு 1919 ரௌலட் சட்டம் கொண்டு வந்தது. இதில் மக்களின் உரிமைகள் பாதிக்கப்பட்டது.
- காந்தி இதை எதிர்த்து சத்தியாகிரகப் போராட்டம் துவக்கினார். ஆனால் போராட்டத்தில் வன்முறை ஏற்பட்டது.
- காந்தி இதை கட்டுப்படுத்த மூன்று நாள் உண்ணாவிரதம் இருந்தார்.
- ஏப்ரல் 13 ஆம் தேதி பைசாகி நாளில் ஜாலியன் வாலாபாத் என்ற இடத்தில் கூடி இருந்த மக்கள் மீது ஜெனரல் டயர் துப்பாக்கி சூடு நடத்தினர். இதில் பலர் இறந்தனர். இதை விசாரிக்க காங்கிரஸ் ஒரு குழுவை நியமித்தது. இதில் காந்தியும் ஒரு உறுப்பினர் ஆவார்.
- விசாரித்த குழு அறிக்கையில் ரௌலட் சட்டம் தான் இந்த படுகொலைக்கு காரணம் என்று கூறியது இதற்கு அமிர்தசரஸ் படுகொலை என பெயரிட்டது.

## சுதந்திரப் போராட்டத்தில் காந்தியின் பங்கு

- இந்தியாவில் பிரிந்திருந்த இந்து முஸ்லீம் மக்களிடம் ஒற்றுமை ஏற்படுத்த காந்தி கிலாபத் இயக்கத்தை ஆதரித்தார்.

➢ **காந்தியும் ஒத்துழையாமை இயக்கமும்**

- காந்தி இதன் மூலம் ஆங்கிலேயருக்கு ஒத்துழைக்க கூடாது என கூறினார். நீதிமன்றம், சட்டசபை, பள்ளி, கல்லூரி ஆகிய இடங்களுக்கு சென்று பணி செய்ய கூடாது என கூறினார்.
- காந்தி வெளிநாட்டு பொருட்களையும், துணிகளையும் பயன்படுத்த கூடாது என்றார்.
- காந்தி இன்னும் ஓர் ஆண்டில் இந்தியா சுயராஜியம் அடைய வேண்டும் என்றார். இது 1920 நாக்பூரில் நடந்த காங்கிரஸ் மாநாட்டு தீர்மானம் சேர்க்கப்பட்டது.
- இதனால் காந்தி சுதந்திரப் போராட்டத்தில் காலியாக இருந்த இடத்தை நிரப்பி தேசிய தலைவராக உயர்ந்தார்.
- வேல்ஸ் இளவரசர் (வேல்ஸ் பகுதியை) இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் செய்தார்.
- காந்தி இந்த நேரத்தில் பர்தோலில் பெறும் சட்ட மறுப்பு இயக்க போராட்டம் துவங்கினார். இது சாத்வீக முறையில் நடக்க வேண்டும் என்றார்.
- எதிர்பாராத விதமாக உத்திர பிரதேசத்தில் உள்ள சௌரிச் சௌரா என்ற இடத்தில் கலவரம் ஏற்பட்டுவிட்டது. பிப்ரவரி 3, 1922-ல் இதனால் காந்தி உடனே போராட்டத்தை நிறுத்திவிட்டார்.
- காந்தி நான் இமாலய தவறு செய்துவிட்டேன். மக்கள் இன்று சாத்வீகப் போராட்டத்திற்கு பக்குவப்படவில்லை என கூறினார்.
- காந்தி கைது செய்யப்பட்டு ஆறு ஆண்டுகள் சிறைதண்டனை வழங்கி சிறையில் அடைக்கப்பட்டார்.
- காந்தி இதன் மூலம் மக்களுக்கு ஒரு புதுப் பாதையை காட்டினார்.
- காந்தியின் இந்த செயலை எதிர்த்து சி.ஆர். தாஸ், மோதிலால் நேரு, வி.ஜே. பட்டேல் இணைந்து சுவராஜ் கட்சி துவங்கினர்.
- காந்தியின் 21 நாட்கள் உண்ணாவிரதம்
- காந்தி பிப்ரவரி 5, 1924 ஆண்டு விடுதலைச் செய்யப்பட்டார்.
- சாதிக் கலவரத்தை நிறுத்தி அமைதி ஏற்பட வேண்டி மக்களிடம் கூறி 21 நாட்கள் முகமது அலி ஜின்னா வீட்டில் உண்ணாவிரதம் காந்தி இருந்தார்.

➢ **காந்தியும் தண்டி யாத்திரையும்**

- ஆங்கில அரசு உப்புக்கு வரி விதித்தது. இதை எதிர்த்து காந்தி சட்ட மறுப்பு போராட்டம் துவங்கினார்.
- காந்தி மார்ச் 1930, சபர்மதி ஆசிரமத்திலிருந்து 24 மைல்கள் கடந்து தண்டி கடற்கரை பகுதிக்கு சென்று உப்பு சாத்தினார்.
- காந்தி மே மாதம் 5 ஆம் தேதி 1930 –ல் கைதுச் செய்யப்பட்டார். ஆங்கில அரசு பிரச்சனைகளை தீர்க்க எண்ணியது ஜனவரி 5, 1931 காந்தியும் மற்றவர்களையும் விடுதலைச் செய்தது.
- காந்தி சட்டமறுப்பு போராட்டத்தை கைவிட்டு இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் லண்டனில் கலந்துக் கொள்ள ஒப்புக் கொண்டார். இந்த ஒப்பந்தத்திற்கு காந்தி இர்வின் ஒப்பந்தம் என்று பெயர்.

➢ **காந்தியும் இரண்டாவது வட்ட மேஜை மாநாடும்(லண்டன்)**

- காந்தி இந்த மாநாட்டில் முழு சுதந்திரம் இந்தியாவிற்கு வேண்டும் என்றார். ஆனால், ஆங்கில அரசு மறுத்து விட்டது. எனவே, காந்தி இந்தியா திரும்பினார். இந்தியா வந்ததும் காந்தி கைதுச் செய்யப்பட்டு ஏர்வாட சிறையில் அடைக்கப்பட்டார்.

➢ **காந்தியும் சாதிக் கொடையும்**

- இங்கிலாந்து பிரதமர் ராம்சே மேக்டோனல் இந்தியாவிற்கு சாதி பிரிதிநிதித்துவ முறையை ஆகஸ்டு 17, 1932 –ல் அறிவித்தார்.
- இதில் ஏற்கனவே முஸ்லீம், கிருஸ்துவர்கள் பெற்ற சலுகைப்போல் அரிசனங்களுக்கு வழங்கப்பட்டது. இதை உடனே காந்திஜி எதிர்த்து சாகும் வரை உண்ணாவிரதத்தை

ஏர்வாட சிறையில் துவங்கினார். இந்த சாதிக் கொடை திரும்ப பெறும் வரை தொடரும் என்றார்.

- இதனால் பூனா ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி அரிசனங்களுக்கு கூட்டு தொகுதி இட ஒதுக்கீடு முறை வந்தது.

➢ **காந்தியும் அரிசனங்களும்**

- காந்தி சமூக வேறுபாடுகளை எதிர்த்தார். அரிசனங்களுக்கு எதிராக உள்ள சமூக கொடுமைகளை எதிர்த்து போராடினார்.
- காந்தி தீண்டாமையை எதிர்த்து போராடினார்.
- ஜீலை 14, 1942 வார்தாவில் கூடிய காங்கிரஸ் கட்சி கூட்டத்தில் ஆங்கிலேயர் ஆட்சி உடனே இந்தியாவில் முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என தீர்மானித்தது.

➢ **காந்தியும் முஸ்லீம் லீக் கட்சியும்**

- முஸ்லீம் லீக் கட்சி பாக்கிஸ்தான் தனி நாடு அடைந்தே தீர்வோம் என கூறியது. காந்திஜி இரு நாட்டு கொள்கையை எதிர்த்தார்.

➢ **காந்திஜியும் - ஜின்னாஜியும்**

- ஆங்கில அரசு இந்து முஸ்லீம் வேறுப்பாட்டை பயன்படுத்திக் கொண்டது. நாடு பிரிப்பதை காந்தி எதிர்த்து ஜின்னாவிடம் பேசினார்.
- ஜின்னா நாடு சுதந்திரம் அடைய முஸ்லீம் லீக் ஒத்துழைப்பு வேண்டுமானால் பாகிஸ்தான் பிரிக்க வேண்டும் என்று கூறினார். இதை காந்தி ஏற்க மறுத்துவிட்டார்.

➢ **பிரிவினை**

- ஜின்னா தலைமையில் அரசு அமைக்கலாம். ஆனால் நாட்டை பிரிக்கக் கூடாது என காந்திஜி கூறியதை மௌண்ட்பேட்டன் பிரபும் ஜின்னாவும் ஏற்கவில்லை. எனவே, இருதேசக் கொள்கைப்படி இந்தியா பாக்கிஸ்தான் என பிரிக்கப்பட்டது.

➢ **காந்தியின் படுக்கொலை**

- ஜனவரி 30, 1948 மாகாத்மா காந்திஜி வழிப்பாட்டுக்கு பிர்லா மாளிகைக்கு செல்லும் வழியில் படுகொலைச் செய்யப்பட்டார். கடைசியாக காந்திஜி உதிர்த்த வார்த்தை ராம் என்பது ஆகும்.

# ஜவஹர்லால் நேரு (1889 – 1964)

- பண்டிட் ஜவஹர்லால் நேரு கடந்த 50 ஆண்டுகளாக இந்திய அரசியலில் அதிகாரம் செலுத்தினார்.
- நேரு காந்தியுடன் இணைந்து இந்திய சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டார்.
- நேரு தன் முழு வாழ்வையே இந்திய சுதந்திரத்திற்காக அர்ப்பணித்தார்.
- இந்தியா சுதந்திரம் பெற்ற பின் பிரதம மந்திரியாக 17 ஆண்டுகளாக சிறப்பாக பணியாற்றினார்.
- நேரு தன் காலத்தில் இந்தியாவிற்கு உலக அரங்கில் முக்கிய இடத்தை பெற்று தந்தார்.

➢ **நேருவின் இளமைக்காலமும், கல்வியும்**

- நேரு நவம்பர் 14, 1889 ஆம் ஆண்டு செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தார். இவருடைய பெற்றோர் மோதிலால் நேரு வழக்கறிஞர், சுதந்திரப் போராட்ட வீரர். அவருடைய தாயார் சொருபராணி ஆவார். இவர் வாழ்ந்த வீட்டுக்கு சுவராஜ்பவன் என்று பெயர்.
- நேருக்கு சமஸ்கிருதம் போதித்தவர் கங்கானாத் ஜா ஆவார். ஆங்கிலம் போதித்தவர் கு.வு. புருக்ஸ் ஆவார். இவர் அன்னிபெசன்ட் அம்மையாரால் பரிந்துரை செய்யப்பட்டவர்.

- நேரு லண்டனில் உள்ள ஆர்வோ பள்ளி மற்றும் கேம்பிரிட்ஜிலும் படித்தார். நேரு சட்டமும் படித்தார்.

### ➢ நேரு இல்லற வாழ்வு

- நேரு 23 வயதில், 13 வயது நிறைந்த கமலா என்பவரை பிப்ரவரி 8, 1916 –ல் திருமணம் செய்துக் கொண்டார். இவர்களுக்கு 1917 ஆம் ஆண்டு முதல் பெண் குழந்தை பிறந்தது. அந்த பெண் குழந்தைக்கு இந்திரா என பெயரிட்டனர்.

### ➢ நேரு வழக்கறிஞராக பணிபுரிதல்

- நேரு அப்பாவைப் போல் வழக்கறிஞராக அலகாபாத் நீதி மன்றத்தில் பதிவு செய்தார். ஆனால் தொழில் ஆர்வம் இல்லை.
- நேரு ஜான் ஆம்பலன்ஸ் சங்கத்தில் சேர்ந்து சிறப்பாக பணியாற்றி அதன் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இது உத்திர பிரதேசத்தில் செயல்பட்டது.
- தென் ஆப்பிரிக்காவில் வாழும் இந்தியரின் வாழ்வு மேம்பட தென் ஆப்பிரிக்க குழு உருவாக்க நிதி சேகரித்து அனுப்பினார்.
- ஜவர்லால் நேருவின் தந்தை மோதிலால் நேரு நடத்திய இண்டிபெண்டன்ட் செயிதித்தாளில் நேருவும் இணைந்து பணியாற்றினார்.

### ➢ நேரு அரசியலில் ஈடுபடுதல்

- ஜாலியன் வாலாபாக் படுக்கொலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரு நிதி திரட்டி கொடுத்தார்.
- நேரு தன் தந்தை மோதிலால் நேரு உடன் பஞ்சாப்பில் உள்ள அமிர்தசரஸ் இடத்தில் நடந்த ஜாலியன் வாலாபாக் படுக்கொலை நடந்த இடத்திற்கு சென்று உண்மை அறியும் குழுவில் இடம்பெற்று பணியாற்றினார்.

### ➢ நேரு காந்தியை சந்தித்தல்

- நேரு பல்வேறு மக்கள் நல வளர்ச்சிக்கு நிதி திரட்டும் பணியில் ஈடுப்பட்டு கொண்டிருக்கும் போது காந்தியை சந்தித்தார்.
- காந்தியின் சத்தியாகிரக உறுதி மொழியில் நேரு முதல் கையொப்பம் இட்டார்.
- காந்தியின் வழிகாட்டுதலில் நேரு விவசாயிகள் போராட்டத்திலும், ஒத்துழையாமை இயக்க போராட்டத்திலும் ஈடுபட்டார்.
- நேரு அலகாபாத்தில் ஒத்துழையாமை இயக்க போராட்டத்தை சிறப்பாக செய்தார். கடையடைப்பு போராட்டம், வெளிநாட்டு பொருட்கள் எரிப்பு போராட்டம் சிறப்பாக நேரு நடத்தினார்.
- மோதிலால் நேருவும், ஜவஹர்லால் நேருவும் இன்டிபென்டன்ட் பத்திரிக்கையில் அரசுக்கு எதிராக எழுதியதால் 1921 டிசம்பர் 5 ஆம் நாள் கைது செய்து சிறையில் அடைத்தது.
- ஜவஹர்லால் நேரு 1923 சிறையில் இருந்து விடுதலையானதும் அலகாபாத் முனிசிபல் சேர்மன் ஆக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- நேரு சேர்மனாக மிக சிறப்பாக செயல்பட்டார். பல புதுமைகளை நிர்வாகத்தில் புகுத்தினார்.
- நேரு தேச ஒற்றுமைக்கு சிறப்பாக கூட்டங்களை நடத்தினார். அதில் பேசினார். இதனால் அவர் நிலை உயர்ந்தது.

➢ இந்திய தேசிய காங்கிரஸ் மூன்று செயலாளர்களில் ஜவஹர்லால் நேருவும் ஒருவர் ஆவார்

- ஜவஹர்லால் நேருவின் திறமையான செயல் முறையால், ஒத்துழையாமை இயக்க போராட்டம் வெற்றிபெற்றது.
- நேரு தலைவராக உயர்ந்தார். இவர் செயலாளராக பதவி ஏற்றதும் இந்திய தேசிய காங்கிரஸில் பல நிர்வாக மற்றும் செயல் முறையில் மாற்றம் செய்தார்.
- நேரு செயல்பாடுகளால் அவருக்கு பேரும் புகழும் பெருகியது. இதனால் உலக காங்கிரஸ் இயக்கம் நேருவை அழைத்து தங்களுக்கு காலனிநாடுகளின் ஒடுக்கத்தையும், இம்பீரியல்

ஆங்கில அரசின் கொள்கையை தோற்கடிக்கவும் வழிக்காட்டியாக செயல்பட நேருவை 1927 –ல் அழைப்பு விடுத்தது. இக்கூட்டம் பிரேசிலில் நடந்தது.

- இதில் பேசிய நேரு இந்தியாவின் வறுமைக்கு ஆங்கிலேயரின் சுரண்டு கொள்கையே காரணம் என பேசினார்.
- இதை முறியடிப்போம் என்றார். இதல் நேரு உலக காங்கிரஸின் செயற் குழு உறுப்பினராகவும், கௌரவ தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டார்.
- 1927 ஆம் ஆண்டு சென்னையில் நடைப்பெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் ஜவஹர்லால் நேரு கலந்துக் கொண்டார். அன்னிபெசன்ட் அம்மையாரின் ஆலோசனை படி ஜவஹர்லால் நேரு முழு சுதந்திரம் வேண்டும் என்ற தீர்மானத்தை கொண்டு வந்தார்.
- இந்தியாவின் நிலை அறிய ஆங்கில அரசு 1927 –ல் ஆங்கிலேயர் மட்டும் உறுப்பினராக உள்ள சைமன் குழுவை இந்தியாவிற்கு அனுப்பியது. காந்தி, நேரு, காங்கிரஸ் இக்குழுவில் இந்தியர்கள் யாரும் உறுப்பினராக இல்லாததால் எதிர்த்தனர். சைமனே திரும்பி போ என்று கூறினர்.
- நேரு, நாடு முழுவதும் சைமனுக்கு எதிராக போராட்டத்தை உருவாக்கினார். லக்னோவில் நேரு போராடும்போது போலிஸால் தாக்கப்பட்டார். இது நாடு முழுவதும் மேலும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.
- பிறகு ஜவஹர்லால் நேரு இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் தலைமையில் 1929-ல் லாகூர் மாநாடு நடைப்பெற்றது.
- ஆங்கில அரசு உப்புக்கு வரி விதித்தது. இதை காந்தி எதிர்த்து சட்டமறுப்பு இயக்க போராட்டத்தை ஏப்ரல் 6, 1930 ஆம் ஆண்டில் துவங்கினார்.
- காந்தி சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டி வரை நடைபயணமாக சென்று உப்பு வரி சட்டத்தை எதிர்த்து உப்பு காச்சினர்.
- இந்தியா முழுவதும் இது நடந்தது. நேரு அலகாபாத்தில் சட்டமறுப்பு போராட்டத்தில் ஈடுபட்டார்.
- நேரு கைது செய்யப்பட்டார். கமலா நேரு பிப்ரவரி 28, 1936 –ல் இறந்தார்.
- கிரிப்ஸ் தூது குழு தோல்வியடைந்ததால் இந்திய தேசிய காங்கிரஸ் பம்பாயில் கூடி 1942 –ல் வெள்ளையனே வெளியேறு போராட்டத்தை துவக்கியது.
- ஆங்கில அரசு அனைத்து தலைவர்களையும் கைது செய்து சிறையில் அடைத்தது. நேரு சூன் 15, 1945 தனது 34 மாத சிறைவாசம் முடித்து விடுதலையானார்.
- செப்டம்பர் 2, 1946 இடைக்கால அரசு காங்கிரஸ் கட்சி பதவி ஏற்றது. இதில் நேருவுக்கு வெளிநாட்டு உறவு துறையும் வழங்கப்பட்டது.

### ➢ இந்தியா-பாகிஸ்தான் பிரிவினை

- ஆங்கில அரசின் பிரிவினை கொள்கை, ஜின்னாவின் பிடிவாதம் இந்தியா பிரித்து பாக்கிஸ்தான் உருவானது. இந்தியா ஆகஸ்டு 15, 1947 சுதந்திரம் பெற்றது. நேரு பிரதம மந்திரியானார்.

### ➢ நேரு எழுதியவைகள்

- சோவியத் ரஷ்யா, 1929
- அப்பாவிடம் இருந்து மகளுக்கு எழுதிய கடிதங்கள், 1930
- நடப்புகால நிகழ்வு கட்டுரைகள், 1934
- நேரு சுயசரிதை, 1936
- இந்தியாவும் உலகமும், 1936
- 18 மாதங்கள் இந்தியாவில், 1936
- உலக வரலாற்றின் வண்ணங்கள், 1939
- இந்தியாவின் ஒற்றுமை, 1944
- இந்தியாவின் கண்டுப்பிடிப்பு, 1946
- சுதந்திரத்திற்கு பிறகு, 1949
- நேருவும் காந்தியும், 1949
- பழைய கடிதங்களின் பட்டியல், 1958

- **தேசிய உணர்வுப்பற்றி நேருவின் கருத்து**
  - தேசிய உணர்வு என்பது சுயசார்பு நிலை அடைதல் ஆகும்.

- **பன்னாட்டு உணர்வுப்பற்றி நேரு கருத்து**
  - நேரு பஞ்சசீலம் கொள்கையை பின்பற்றினால் உலகில் அமைதி மதிப்பும், கவனத்தையும் கவரலாம் என்றார்.

- **கூட்டு சேராமை பற்றி நேரு கருத்து**
  - கூட்டு சேராமை கொள்கை மூலம் உலகில் எல்லா நாடுகளின் நட்பும் அன்பையும் பெறலாம்.

- **காமன்வெல்த் பற்றி நேரு கருத்து**
  - காமன்வெல்த் அமைப்பு எந்த நாட்டு விவாகரத்தில் தேவை இல்லாமல் தலையிடுமானால் இந்தியா அதிலிருந்து விலகிவிடும் என்றார்.

- **ஐ.நாவை பற்றி நேரு கருத்து**
  - ஐ.நா சபை இல்லாமல் போகின்ற நிலை ஏற்பட்டால் உலகில் ஒரு பெரும் பேரழிவு ஏற்படும்.

- **மதத்தைப் பற்றி நேரு கருத்து**
  - மதத்தில் உள்ள மூடநம்பிக்கையையும், முட்டாள் தனமான மத நம்பிக்கையும் மதத்தில் இருக்க கூடாது.

- **மக்களாட்சி பற்றி நேரு கருத்து**
  - அரசியலில் மக்களாட்சி மூலம் சிறிது சிறிதாக பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு உண்மையான மக்களாட்சி உருவாக்க முடியும்.

- **தல சுய ஆட்சி பற்றி நேரு கருத்து**
  - கிராம சபையின் மூலம் உண்மையான மற்றும் பொறுப்பான பிரதிநிதிகளை உருவாக்க முடியும்.

- **அமைதி மற்றும் போர் பற்றி நேரு கருத்து**
  - மனித வாழ்வாதாரம் பற்றி பரிசோதனை அமைதி மூலம் காணலாம். போரின் மூலம் நாகரிகத்தின் மதிப்பு அழிக்கப்படும்.

- **ஒரே உலகம் பற்றி நேரு கருத்து**
  - மனித வரலாற்றில் ஒரே உலகத்தை உருவாக்க வேண்டுமானால் பல ஆபத்துக்களையும், தடைக்கற்களையும் தாண்டி வர வேண்டும்.

- **அறிவியல் தொழில் நுட்பத்தைப்பற்றி நேரு கருத்து**
  - அறிவியல் தோழில் நுட்பம் இல்லாமல் நாம் வளர்ச்சி அடைய முடியாது.

- **பொருளாதாரத்தை பற்றி நேரு கருத்து**
  - பொருளாதார மேம்பாடு நாம் அடைய வேண்டும் என்றால் நம் மக்களின் வாழ்வு தரம் மேம்பட உள்ள தடைகளை நீக்க வேண்டும்.

- **சமதர்ம சமுதாயம் பற்றி நேரு கருத்து**
  - அனைவருக்கும் சமமான வாய்ப்பு வழங்குதல் தான் இந்தியாவில் பொருளாதார பிரச்சனைகளை தீர்கக் முடியும். சமதர்ம சமுதாயம் படைக்க முடியும்.
  - நேரு உண்மையான சமதர்ம மக்களாட்சி உருவாக்க பாடுபட்டார்.

- இந்திய மக்களிடம் உள்ள வறுமை, வேலையில்லா திண்டாட்டம், ஏற்ற தாழ்வுகளை சோஷியலிசம் மூலம் தான் நீக்க முடியும்.

➢ **நேரு மற்றும் காந்தி ஒற்றுமை**

- காந்தி மற்றும் நேரு-வின் புகழ் நிழலில் தான் இந்தியா வாழ்கிறது.
- காந்தி மற்றும் நேரு இருவரின் பணிகளும், தியாகமும் ஒன்று.

➢ வேற்றுமை

- காந்தி துறவி போன்ற அரசியல்வாதி. ஆனால் நேரு உயர்ந்த அரசியல் -வாதியாகவும் சிறந்த தலைவராகவும் இருந்தார்.
- காந்தி பழைமைக்கும், நாகரிகத்துக்கும் மதிப்பளித்தார், ஆனால் நேரு அவ்வளவாக அதற்கு முக்கியத்துவம் தரவில்லை.

# இரபிந்திரநாத் தாகூர் (1861 – 1941)

- ரபிந்திரநாத் தாகூர் 'மிக உயர்ந்த காவலாளி' என மகாத்மா காந்தியால் அழைக்கப்பட்டார்.
- தாகூர் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார். தாகூர் கிழக்கிந்திய நாட்டின் பாரம்பரியத்தின் தூதுவராக மேற்கத்திய நாடுகளுக்கு சென்று செயல்பட்டார்.
- தாகூருக்கு தேவகுரு என்ற பட்டம் உண்டு. தாகூர் பிறப்பு உயர்வானது, நல்ல உடல் வளம் பெற்றவர். சிறப்பான மனத்தில் உயர்வான செயலினல் வாழ்ந்தார்.
- தாகூரின் ஆன்மிக வாழ்வு உயர்வானதாக இருந்தது. தாகூரின் தந்தை பெயர் தேவேந்திரநாத் (1817 – 1905). இவரை மகரிஷி என்று அழைப்பார்கள்.
- தாகூரின் வீடு மதம், தத்துவம் இலக்கியம் ஆகியவற்றின் மையமாக இருந்தது.

➢ **இளமைப்பருவம்**

- தாகூர் மே 7, 1861-ல் ஜொராஸ்சன்கோ என்ற கிராமத்தில் கங்கை கரையில் கல்கத்தாவில் உள்ள இடத்தில் பிறந்தார். இவர் தந்தை பெயர் தேவேந்திரநாத். தாகூரின் அம்மா பெயர் சாராதாதேவி.
- தாகூர் ஆரம்பள்ளியில் ஆர்வமோ, மகிழ்ச்சியோ இல்லை. ஆனால் தாகூர் இயற்கையாகவே கவிதை எழுதினார்.
- தாகூரின் கவிதை ஆங்கில பெங்காளி வார இதழில் வெளியிடப்பட்டது.
- தாகூர் செப்டம்பர் 20, 1878 இங்கிலாந்து சென்றார். ஆனால் விரைவாக இந்தியா திரும்பிவிட்டார்.
- தாகூர் தன்னுடைய ஆன்மிக சிந்தனையால் எல்லாவற்றையும் எல்லா மனிதர்களையும் வேறுபாடின்றி பார்த்தார். எல்லா உயிரினத்தின் மேலும் அன்பும், கருணையும் ஏற்பட்டது. தாகூர் தனது 20 ஆம் வயதில் திருமணம் செய்துக்கொண்டார்.

➢ **சாந்திநிக்கேதன்**

- தாகூர் டிசம்பர் 22, 1901 ஆசிரமம் நிறுவினார். இதற்கு சாந்திநிக்கேதன் என பெயரிட்டார்.

➢ **கீதாஞ்சலி**

- தாகூர் தனக்கு ஏற்பட்ட வாழ்க்கை போராட்டங்களும், அதை அவர் எதிர்த்த விதமும் ஒருவித அழகை அவர் கருதி கீதாஞ்சலி பாடலில் விளக்கி எழுதினார். இதன் மூலம் தாகூரின் பன்முக அறிவு முதிர்ச்சியும், ஆன்மிக சிந்தனையும் வெளிப்பட்டது.
- தாகூர் கீதாஞசலியை 1910 வங்க மொழியில் எழுதி வெளியிட்டார். ஆனால் அவ்வளவாக மதிக்கப்படவோ முக்கியத்துவமோ பெறவில்லை.

- தாகூர் கீதாஞ்சலியை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்து 1912 வெளியிட்டார். தாகூர் லண்டன் சென்ற போது அதை எடுத்து சென்று சர் வில்லியம் ரோத்தன்பி என்பவரிடம் கொடுத்தார். அவர் அதை W.B. யாட்ஸ் என்ற ஆங்கில கவிஞரிடம் கொடுத்தார்.
- அவர் கீதாஞ்சலி உயர்ந்த கலாச்சாரத்தை பிரதிபலிக்கின்றது என கூறி நோபல் பரிசு குழுவுக்கு பரிந்துரைத்தார். பிறகு தாகூருக்கு நோபல் பரிசு கிடைத்தது.

## ➢ விஷ்வபாரதி

- தாகூர் ஒருமுறை தந்தையுடன் இமயமலைக்கு சென்று வந்தார். தாகூர் 1878 முதல் 1880 வரை லண்டனில் தங்கி இருந்தார். இரண்டாவது முறை தாகூர் 1912 மீண்டும் லண்டன் சென்றார்.
- இப்பயணத்தின் போது தாகூர் கடலுக்கு அப்பால் உள்ள நாகரிகங்களையும், ஆங்கிலேயரின் செயல்பாடுகளையும் தெளிவாக அறிந்துக் கொண்டார்.
- தாகூர் அமெரிக்கா சென்று தொடர்ச்சியாக கூட்டங்களில் பேசினார். இதில் ஆரம்பகால இந்தியாவை விளக்கினார். இது சாதனா இதழில் வெளியிடப்பட்டது.
- தாகூர் ஐரோப்பிய கண்ட நாடுகளுக்கு சென்றார். தாகூர் ஜப்பானுக்கு சென்றார். ஜப்பானியர் நன்கு கவனிப்பார்கள். ஆனால் ஒட்டுமொத்தமாக மேற்கத்திய கருத்துக்களை ஒத்துக்கொள்ளமாட்டார்கள்.
- தாகூர் சைனாவிலும், ஈரானிலும் பேசினார். உலகல் அனைவரும் ஒரு கூட்டுக்குள் சந்திக்க வேண்டும் என்ற கருத்தை தாகூர் கூறியது, அவர்களை மிகவும் மகிழ்ச்சியடைய செய்தது.
- தாகூர் விஷ்வபாரதி அமைப்பை உருவாக்கினார். இங்கு தான் கிழக்கிந்திய மற்றும் மேற்கத்திய மணங்கள் ஒன்று இனைக்கப்பட்டது. அதன்மூலம் அமைதி, வளர்ச்சி, அனைவரும் ஒன்று என்ற கருத்தை உருவாக்கினார்.

## ➢ தாகூர் சமீபகால அரசியல்

- 1898 திலகர் கைது செய்ததை தாகூர் கண்டித்தார். 1905 –ல் வங்கபிரிவினையை தாகூர் எதிர்த்தார். இதற்காக தெருவில் ஊர்வலமாக சென்றார். தேச பக்தி பாடல்களை எழுதினார்.
- தாகூர் தேசிய கல்வியை ஆதரித்தார். சுதேசி இயக்க போராட்டத்திற்கு ஆதரவு அளித்தார்.
- 1908 தாகூர் பெங்கால் மாநில மாநாடு பாட்னாவில் நடத்தினார். இதில் சமூக தேவை மற்றும் இந்து-முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்தினார்.
- ஏப்ரல் 13, 1919 ஜாலியன் வாலாபாக் படுக்கொலையை தாகூர் எதிர்த்து கல்கத்தாவில் கூட்டம் நடத்தினார். அவருக்கு ஆங்கில அரசால் கொடுத்திருந்த ‘நைட்உட்’ பட்டத்தை திருப்பி கொடுத்தார்.
- தாகூர் ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரித்தார். சாதி கொடுமையையும் எதிர்த்தார். காந்திக்கு ஆதரவாக செயல்பட்டார்.

## ➢ தாகூரின் நம்பிக்கை

- மனிதன் வளம்பெற வேண்டுமானால் வளர்ச்சி, மேன்மை, சுய சிந்தனை பெற வேண்டும் என்று கூறினார்.
- தாகூர் வளர்ச்சியினால் வரும் கண்டுப்பிடிப்பு ஆராய்ச்சியிலிருந்து வரும் என்றார்.

## ➢ தாகூரின் சிந்தனை

- தாகூர் பல நிலை சிந்தனையாளர். இவர் அரசியல், பொருளாதாரம், சமூகம், மதம் ஆகியவற்றில் கருத்து கூறியுள்ளார்.
- தாகூர் கவிதை, நாடகம், கட்டுரைகள் எழுதியுள்ளார். தாகூர் முக்கியமான நேரங்களில் தன் முக்கிய கருத்தை தவறாமல் பதிவு செய்தார்.

➢ **தாகூரின் அரசியல் கருத்து**

**சுதந்திரத்தின் அர்த்தம்**

- சாதாரன அரசியல் சுதந்திரம் தாகூர் விரும்ப வில்லை. விரிவான ஆத்ம ரீதியான சுதந்திரம் வேண்டும் என்றார்.
- தாகூர் இந்தியாவின் பண்டைய அரசியல் கோட்பாட்டில் நம்பிக்கை வைத்திருந்தார். இதன் மூலம் தனி மனித சுதந்திரம் வேண்டும் என வலியுறுத்தினார்.

➢ **மக்களாட்சி**

- மக்களாட்சி பொருளாதாரம், கலாச்சார அடிப்படையாக கொண்டது என தாகூர் கூறினார்.
- திருப்தி இல்லா அரசியல் உரிமையும், வாக்குரிதிகளை செயல்படுத்துவது மட்டும் மக்களாட்சி ஆகாது என தாகூர் கூறினார்.

➢ **தேசம், தேசியம், தேசப்பக்தி, நாகரிகம்**

- **தேசம்** என்பது அதிகார அமைப்புடையது.
- **தேசியம்** என்பது சமூகங்களுக்கிடையே வேலியை உருவாக்குவது.
- **தேசப்பக்தி** என்பது முழுமையாக ஒரு நாடு தன்னை அடையாளப்படுத்திக் கொள்வது. அந்நாட்டின் பாரம்பரியம் வெளிப்படும்.
- **நாகரிகம்** என்பது ஆணும், பெண்ணும் தன்விருப்பப்படி வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்ளுதல்.

➢ **பன்னாட்டுவியல், உலகலவியல்**

- தாகூர் ஆன்மிக பாரம்பரியத்தில் வளர்ந்தவர் எனவே மனித இனம் ஒற்றுமையுடன் இணைந்து இருந்தால் உலகத்திற்கு சுதந்திரம் கிடைக்கும் என்றார்.
- நம் முன்னோர்கள் மகிழ்ச்சியும் நல்லவைகளையும் பெற்று நமக்கு தந்துள்ளனர்.
- எனவே தாகூர் இதை நம்பி ஆன்மிகத்தில் ஒற்றுமையை பெற்று உலகவியல் அமைதி பெற்று வாழ முடியும் என்று நம்பினார்.

➢ **பொருளாதார கருத்து**

- சுய உதவியை தாகூர் அடிப்படை கொள்கையாக கருதினார்.
- கூட்டு உறவு முறையை தாகூர் விரும்பினார். வட்டிக்காரர்களிடம் இருந்து விவசாயிகளை காப்பாற்றுவதற்கு கூட்டுறவு வங்கி துவங்க வேண்டும் என்றார். தாகூரின் நோபல் பரிசு தொகையில் ஒரு பகுதியை இந்த விவசாயிகள் கூட்டுறவு வங்கிக்கு கொடுத்தார்.

➢ **சமூக மறுக்கட்டமைப்பு பற்றி தாகூரின் கருத்து**

- சமூக நிறுவனங்கள் அழிந்ததால் தான் இந்திய சமூகம் வீழ்ச்சியடைந்தது. சமூகம் அதிகாரத்தின் மையபகுதியாகும்.
- தாகூரின் சமூக மறுக்கட்டமைப்புக்கு தடையாக உள்ள சமூக கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும் என்றார்.
- எல்லா மக்களும் சேர்ந்ததுதான் சமூக மறுக்கட்டமைப்பு உருவாக்க முடியும்.

➢ **கல்விப்பற்றி தாகூரின் கருத்து**

- ஒரு மனிதனின் புரிந்துணர்வுக்கு பெரிதும் உதவுவது கல்வி. தனிமனிதனுக்கு நல்ல தத்துவத்தையும், சமூகம் மேம்பாடு அடையவும் கல்வி அவசியம்.
- இன்றைய நவீன கல்வி முறையில் உயர்ந்த லட்சியம் கொண்டு இல்லை.
- குழந்தைகளுக்கு போதிக்கும் மொழி அவர்களின் வளர்ச்சியில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.
- மொழிதான் அவர்கள் தகவல் தொடர்பு கொள்ள வழிவகுக்கும் வண்டி ஆகும்.

- புத்தகங்கள் சமூக ஒப்பந்த அடிப்படையில் உள்ளது. பல்கலைகழக கல்வியும் இதனை உள்ளடக்கியதாக உள்ளது.
- கல்வி மூன்று அம்சங்கள் அடிப்படையில் இருக்க வேண்டும். அது கலாச்சாரம், ஆன்மீகம், பொருளாதார வளர்ச்சி.

### கிழக்கு மற்றும் மேற்கு சந்திப்பு

- தாகூர் உண்மையான மனித இனம், மனிதநேயம், உலகலவிய பார்வை, அனைவரும் ஒன்று என்ற அனுகுமுறை வரவேண்டுமானால் உலகின் கிழக்கு பகுதி மக்களும் மேற்கத்திய மக்களும் ஒன்று இணைய வேண்டும்.
- தாகூர் இதற்காக தான் 1921, விஷ்வபாரதி கல்வி மையம் ஏற்படுத்தினார்.
- இதில் கிழக்கத்திய மக்களும், மேற்கத்திய மக்களும் சந்தித்து பேசுதல், புரிந்துக் கொள்ளுதல் இதன் மூலம் அடிப்படையான உலக அமைதிக்கு வழிவகுக்கும் என்றார்.

### தாகூரின் மத நம்பிக்கை

- தாகூர் தர்மத்தையும் கடவுளையும் நம்பினார். தாகூர் எதையும் கண்மூடித்தனமாக நம்பமாட்டார். ஏற்கனவே சிறப்பாகவும், பிரபலமாகவும் உள்ளது என்பதற்காக நம்பமாட்டார், ஏற்கவும் மாட்டார்.

- தாகூர் கர்மாவை நம்பினார். இவர் எல்லா சிந்தனைகளிலும், செயல்களிலும் இறைவனை கண்டார்.

APPOLO STUDY CENTRE

# சுபாஸ் சந்திர போஸ் (1897-1945)

- சுபாஸ் மிக உயர்ந்த அரசியல் தலைவர். இவர் அரசியலில் பணியாளராகவும், தலைவராகவும் மிக சிறப்பாக செயல்பட்டு வலிமையான தேசிய உணர்வை வளர்த்தார். தேசப்பற்று மிக்க உயர்ந்த மாமனிதராகவும் மனச்சாட்சிக்கு கட்டுப்பட்டும் செயல்பட்டார்.
- இவர் எப்போதும் இனக்கலவரம் நடக்கும் மாநிலமான வங்காளத்தில் பிறந்தார். போஸ் தூய்மையான தேசப்பக்தியை போதித்தார். அதற்காக போராடினார்.
- போஸ் இந்தியாவிலும் வெளிநாட்டிலும் மிக சிறப்பான பேச்சாளராக இருந்ததால் எல்லா பிரிவு மக்களிடையே தேசபற்றை உருவாக்கினார்.

## ➢ குடும்பம் மற்றும் ஆரம்பக்கல்வி

- போஸின் அப்பா ஜானகிநாத் போஸ், அம்மா பிரபாவதி ஆவார். போசின் தந்தையார் வழக்கறிஞர் எனவே, இவர்கள் கட்டாக்கில் வாழ்ந்தனர். இவர்களுக்கு போஸ் 1897 ஆம் ஆண்டு 9வது குழந்தையாக பிறந்தார்.
- 1897-ஆம் ஆண்டில் ஆங்கில அரசு மகாராணி விக்டோரியாவின் ஆட்சி, தங்க விழாவை கொண்டாடியது.
- போஸ் 1902 கட்டாக்கில் ஆரம்ப கல்வி பெற்றார். மெட்ரிக் தேர்வில் போஸ் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது ரேங்கில் தேர்வு பெற்றார்.

## ➢ போஸின் கல்லூரி வாழ்க்கை (1913-1919)

- கல்கத்தா பல்கலைக்கழகத்தில் வரும் மாநிலக் கல்லூரியில் 1913-ல் போஸ் சேர்ந்தார்.
- போஸ் ஆன்மீகத்தின் இவரது குருவாக ராமகிருஷ்ணன் மற்றும் விவேகானந்தரை தேர்வு செய்தார்.
- போஸ் நவீன தேசத்தின் மறுகட்டமைப்பை உருவாக்க படிப்புடன், சமூகபணி மற்றும் யோகா செய்ய வேண்டும் என்றார்.
- போஸ் அரவிந்தகோஸின் தத்துவங்களை படித்தார். இதனால், அரசியல் கருத்தை போஸ் புதிய பார்வையில் பார்த்தார்.
- 1916 ஆம் ஆண்டு போஸின் வாழ்க்கை முறை முற்றிலுமாக மாறியது.
- போஸ் 1919-ல் B.A பட்டம் தத்துவத்தில் முதல் வகுப்பில் தேர்ச்சிப் பெற்றார்.
- போஸ் செப்டம்பர் 15, 1919-ல் இங்கிலாந்துக்கு சென்றார்.

## ➢ போஸ் கேம்பிரிட்ஜ் கல்லூரியில் படித்தல் பிறகு ICS தேர்வில் வெற்றி பெற்று பதவி ஏற்க மறுத்து ராஜினாமா செய்தார்

- போஸ் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது அங்கு ஆங்கில மற்றும் இந்திய மாணவர்களின் உறவு சுமூகமாக இல்லை. போஸ் இங்கிலாந்து வாழ்வு மகிழ்ச்சியாக இல்லை.
- போஸ் இங்கிலாந்தில் இரண்டு முக்கிய பணிகளை இணைந்து செய்துக்கொண்டிருந்தார். ஒன்று மேற்படிப்பு, மற்றொன்று ICS தேர்வுக்கு சேர்ந்து படித்தார். இதனால் ஓய்வு இல்லை.
- போஸ் ICS தேர்வில் வெற்றி பெற்றார். ஆனால், பதவி ஏற்க விரும்பவில்லை. அத்துடன் வங்காளத்தில் உள்ள சுதந்திர போரட்ட தலைவர் தேசபந்து சித்தரன்ஜன் தாஸ் அவர்களுக்கு கடிதம் எழுதினார். அதில் நான் ICS பணியில் சேர போவதில்லை. காரணம், தேசிய போராட்டத்தில் உங்கள் தலைமையின் கீழ் பணியாற்ற விரும்புகிறேன் என்று எழுதினார்.
- போஸின் கருத்துக்கு குடும்பத்தில் எதிர்ப்பு 1921-ல் தொடர்ச்சியாக பல கடிதங்களை போஸ் C.R. தாஸிர்க்கு எழுதினார்.
- போஸ் காங்கிரஸில் உளவுப்பரிவும், விளம்பரப்பிரிவும் உருவாக்க வேண்டுமென்றால், காங்கிரஸ் இந்தியாவில் உள்ள அணைத்து மாநில மொழிகளிலும் காங்கிரஸின் தேசிய போராட்டத்தை சிறு புத்தகமாக அல்லது நோட்டாக வெளியிட வேண்டும் என்றார் போஸ்.

- போஸ் இந்தியாவிற்கு வந்து C.R. தாஸ் மூன்று வழிகளில் பணியாற்ற விரும்பினார். முதலில் C.R. தாஸ் உருவாக்கிய தேசிய கல்லூாயீல் பேராசிரியராக பணிபுரிதல், இரண்டாவதாக சுவராஜ் தேசிய செய்தித்தாலில் ஆங்கிலத்தில் தேசிய உணர்வு பற்றி எழுதுதல், மூன்றாவதாக காங்கிரஸ் இயக்கத்தை பற்றி மேலும் தீவிரமாக ஆராய்ச்சி செய்தல் ஆகும்.
- போஸ் ICS தேர்வில் வெற்றி பெற்றும், பணியில் சேராமல் இந்திய தேசிய இயக்கத்தில் சேர்ந்தது பல இந்திய மாணவர்களிடையே இந்தியாவிலும், இங்லாந்திலும் பெறும் ஆச்சிரியமும், கலக்கமும் ஏற்பட்டது.
- போஸிற்க்கு கடைசியாக அவருடைய தாயிடம் இருந்து வந்த கடிதத்தில் காந்திஜி வழியில் செயல்படு என எழுதி இருந்தார்.

- பொது வாழ்வில் பயிற்சி பெறவும், ஒத்துழையாமை இயக்கத்தில் போஸ் பங்கு பெறுதல்
- போஸ் 1921-ல் இங்கிலாந்திலிருந்து பம்பாய் வந்தார். அன்றே காந்திஜியை சென்று சந்தித்தார்.
- போஸ் காந்தியிடம் பேசி முடித்த பிறகு அவருக்கு காந்தியின் கொள்கை அதிருப்தி ஏற்பட்டது.
- போஸ் உடனே C.R. தாஸ் அவர்களை சென்று பார்க்க கல்கத்தா சென்றார்.
- போஸ், C.R. தாஸை சந்தித்த பிறகு, போஸிற்க்கு இருபணிகள் கொடுக்கப்பட்டது. ஆனால், வங்காள காங்கிரஸ் குழுவின், பிரச்சார குழுவிலும் மற்றும் தேசியத்தை விரும்பி பணிசெய்யும் குழுவிலும் இடம் பெற்றார்.
- போஸ் தேசிய கல்லூரியில் முதல்வராக பணிபுரிந்தார். போஸின் திறமையாலும், தியாக உணர்வாலும் இவரது உழைப்பாலும் போஸின் புகழ் அனைவரிடமும் பரவியது.
- வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வருவதை காங்கிரஸ் எதிர்த்து நாடு முழுவதும் மறியல் செய்தது.
- கல்கத்தாவில் இந்த போராட்டம் C.R. தாஸ் மற்றும் போஸ் அவர்கள் வழிக்காட்டுதலில் நடந்தது. இதனால், இருவரும் கைது செய்யப்பட்டு 8 மாதங்கள் சிறையில் அடைத்தனர். போஸிற்க்கு இது ஒரு புது அனுபவம். 1921-ல் காங்கிரஸ் குழு C.R. தாஸ் தலைமையில் கல்கத்தாவில் கூடியது.
- இதில் மோதிலால் நேரு, லாலா லஜபதிராய், மௌலான முகமது அலி ஆகிய மூவருடனும் C.R. தாஸ் இணைந்து நாடு முழுவதும் பிரச்சாரம் செய்யப் போவதாக போஸ் அறிவித்தார்.
- போஸ் ரவிந்திரநாத் தாகூரின் சுதந்திரப் போராட்டத்தின் கருத்தை ஏற்றுக் கொண்டார்.
- 1921 ஆம் ஆண்டு பிற்பகுதியில் போஸின் செயல்பாட்டால் வங்காளத்தில் காங்கிரஸின் செயல்பாடு சிறப்பாக இருந்தது.
- போஸ், C.R. தாஸின் நம்பிக்குரிய போர் படைத்தளபதியானார். போஸ் மற்றும் ஜவஹர்லால் நேரு இரு இனைய தளபதிகளின் செயலால் நாட்டில் தேசிய இயக்கத்தில் இளைஞர் அணி வலிமையாக செயல்பட்டது.

➢ போஸின் சுவராஜ் கலகமும் பர்மாவிற்கு நாடு கடத்தலும்

- கயா காங்கிரஸ் மாநாட்டில், காங்கிரஸ் இயக்கத்தின் செயல்பாடுகளை C.R. தாஸ் மற்றும் மோதிலால் நேருக்கும் அதிருப்தி ஏற்பட்டது.
- எனவே, இருவரும் இணைந்து சுவராஜ் கட்சியை துவங்கினார். இது காங்கிரஸின் ஒரு அங்கமாக செயல்பட்டது. இதில் சுபாஸ் ஆர்வமாக செயல்பட்டார்.
- போஸ் வங்காள மாநில காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக தேர்வுச் செய்யப்பட்டார்.
- 1924 ஆம் ஆண்டு நகராட்சி தேர்தலில் சுவராஜ் கட்சி போட்டியிட்டு வெற்றி பெற்றது. C.R. தாஸ் மேயரானார். போஸ் தலைமை செயல் அதிகாரியாக பொறுப்பேற்றார்.
- இதில் பொதுநல வளர்ச்சி நன்கு உருவாக்கப்பட்டது. கதர் ஆடை பணியாளர்களின் சீருடையாக அறிவிக்கப்பட்டது.

- கல்கத்தா கலகத்திற்கு சுவராஜ் கட்சியும் பொறுப்பு என கூறிய ஆங்கில அரசு C.R. தாஸ் மற்றும் போஸை கைது செய்து பர்மாவில் உள்ள மன்டேலா சிறையில் அடைத்தது.
- போஸ், C.R. தாஸ் தலைமையில் சிறப்பாக பயிற்சி பெற்றார். 1927-ல் போஸ் சிறையிலிருந்து விடுதலையானார்.

➢ **கல்கத்தா காங்கிரஸ் 1928**

- 1925-ல் C.R. தாஸ் இறந்துவிட்டார். இது போஸின் வாழ்வில் ஒரு ஈடுசெய்யமுடியாத துயரமான இழப்பாகும்.
- 1925-1927 மகாத்மா காந்தி தீவிர அரசியலிலிருந்து விடுப்பட்டு சமூக பணியில் ஈடுப்பட்டார்.
- காந்தி கதர் உடைக்கும், உள்நாட்டு தொழில்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்கும் உழைத்தார்.
- வைஸ்ராய் இர்வின் பிரபு இந்தியாவின் அரசியல் நிலையை அறிய சர் சைமன் தலைமையில் ஒரு குழுவை இந்தியாவிற்கு அனுப்பி அறிக்கை கேட்டார்.
- 1927-ல் மதராஸில் நடைப்பெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் சைமன் குழுவை எதிர்ப்பது என முடிவு செய்யப்பட்டது.
- போஸ் சபர்மதி ஆசரமத்திற்கு சென்று காந்திஜியிடம் வேண்டி மீண்டும் அரசியல் போராட்டத்திற்கு தலைமை ஏற்க கூறினர்.
- 1928 சைமன் குழு இந்தியாவிற்கு அனைத்து பிரிவினை குழுக்களிடம் பேசியது இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து வழக்கு முடிவு செய்து அறிக்கை சமிர்ப்பித்தது.
- மோதிலால் நேரு மற்றும் போஸ் இணைந்து சைமனிடம் டொமினியன் அந்தஸ்து வேண்டாம் முழு சுதந்திரம் வேண்டும் என்று கூறினார்.
- ஜவஹர்லால் நேரு மற்றும் போஸ் தொடர்ந்து காங்கிரஸின் பொது செயலாளராக செயல்பட்டனர்.
- 1928 ஆகஸ்டு வங்காள மாணவர் மாநாட்டிற்கு போஸ் தலைமை தாங்கி பேசினார்.
- 1928 டிசம்பர் கல்கத்தாவில் அகில இந்திய இளைஞர் காங்கிரஸ் மாநாடு நடந்தது. இதில் போஸ் வரவேற்ப்பு குழு தலைவராகவும், மு.கு. நரிமன் பம்பாய் குழு தலைவராகவும் செயல்பட்டார்.
- இதில் பேசிய போஸ் நவீன சுதந்திர இந்தியா உருவாக்க புதிய கருத்துக்களை பற்றி பேசினார்.
- போஸ் காங்கிரஸின் விரும்பி பணி செய்யும் படைப் பிரிவின் அதிகாரியாக செயல்பட்டார். இப்பிரிவை கட்டுப்பாடு மிகுந்த இராணுவம் போல் உருவாக்கினார்.
- இதில் பல பிரிவுகளை போஸ் உருவாக்கினார். மோட்டார் சைக்கிள் பிரிவு, தரைப்படை பிரிவு, பெண்கள் பிரிவு ஆகும்.
- போஸ் பஞ்சாப், மத்திய மாநிலம், பீகார் என தனித்தனி மாநில மாணவர் மாநாட்டில் பேசியார்.
- போஸ் இந்தியா முழு சுதந்திரம் அடைய வேண்டுமானால் அனைவரிடமும் தேசப்பக்தி, ஒற்றுமை, தியாகம், வீரம், இவைகளில் சமரசம் செய்யாத மனம் வேண்டும் என்று பேசினார்.
- காங்கிரஸ் ஆங்கில அரசுடன் ஒத்துழைத்தும், வட்ட மேஜை மாநாடுகளில் பங்கு பெற்றும் இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்தை பெறலாம் என்றது.
- சைபுதின் கிச்சுலு மற்றும் அப்துல் பாரீ இருவரும் டொமினன் அந்தஸ்த்தை எதிர்த்தனர் மற்றும் வட்ட மேஜை மாநாட்டில் கலந்துக் கொண்டனர்.

➢ **சுபாஸ் மற்றும் ஒத்துழையாமை இயக்கம் (முதல் பகுதி)**

- சுபாஸ் காங்கிரஸ் மக்களாட்சி கட்சியை துவங்கி இராணுவ செயலில் ஈடுபட்டார். இதனால் கைது செய்யப்பட்டார்.
- ஏப்ரல் 6 ஆம் தேதி 1930-ல் காந்தி உப்பு சத்தியாகிரம் துவக்கினார். இதில் கைது செய்யப்பட்டார்.
- சுபாஸ் சிறையில் இருக்கும் போதே கல்கத்தா மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- லண்டனில் முதல் வட்ட மேஜை மாநாடு 1930-ல் நடந்தது. இதில் காங்கிரஸ் பங்கு பெறவில்லை.
- எனவே, சுபாஸ் இந்தியாவிற்கு சுதந்திரம் பெற கீழ்கண்ட வழிகளில் செயல்ப்பட்டார்.
  1. விவாசாயிகள் மற்றும் பணியாளர்களை போரட்டத்தில் பங்கு பெற செய்தல்.
  2. ஒழுக்கத்துடன் கூடிய இளைஞர் பொதுச்சேவை பிரிவை உருவாக்கினார்.
  3. சாதிமுறை ஒழிப்பது, எல்லா பிரிவு சமூக, மத, மூடநம்பிக்கைகளை ஒழித்தல்.
  4. பெண்கள் இயக்கத்தை உருவாக்குதல்
  5. வெளிநாட்டு பொருட்களை ஏற்க மறுப்பது.
  6. புதிய இலக்கியங்களை உருவாக்கி மக்களிடம் பரப்புதல்.
- காந்தி இர்வின் ஒப்பந்தம் போஸிற்க்கு திருப்பி அளிக்கவில்லை.
- போஸ் இளைஞர்களிடம் பேசிய போது உலக முழுவதும் ஆங்கிலேயர் ஆட்சி முடிய இந்தியா வழிகாட்ட வேண்டும் என்றார்.

➢ **சுபாஸ் ஒத்துழையாமை இயக்கம் (இரண்டாவது பகுதி)**

- 1931-ல் சிறையில் இருந்து விடுதலையானதும் சுபாஸ் நிலைமையை ஆராய்ந்தார்.
- கராச்சி காங்கிரஸ் மாநாட்டில் பங்கு பெற காந்தியுடன் சுபாஸ் உடன் சென்றார். இதில் காந்தியின் செல்வாக்கும் கௌரவமும் நேரில் கண்டார்.
- காங்கிரஸ் காந்தியை வட்ட மேஜை மாநாட்டில் கலந்துக் கொள்ள அனுமதி வழங்கியது.
- இதை சுபாஸ் மிகபெரிய தவறு என்று கூறினார். காரணம் இங்கிலாந்தில் காந்தியையும், காங்கிரஸையும் தனிமைப்படுத்த ஆங்கில அரசு முடிவு செய்துள்ளது.
- காந்தி மாநாடு செல்ல திட்டமிட்டது. முகமது அலி ஜின்னா 14 அம்சங்கள் கொண்ட திட்டத்தை வெளியிட்டார்.
- சுபாஸ் காந்தியை சந்தித்து மாநாட்டில் இந்து பிரச்சனைகளையும், முஸ்லீம் பிரச்சனைகளையும் தெளிவாக ஆங்கில அரசிடம் சமர்பிக்க வேண்டினார்.
- இதற்கு இடையில் லண்டனில், ஆங்கில அரசு காந்தியையும், காங்கிரஸையும் திசை திருப்பி முழு சுதந்திர கோரிக்கை மாற்ற திட்டமிட்டதாக சுபாஸிற்கு லண்டனில் இருந்து நண்பர் மூலம் செய்தி கிடைத்தது.
- சுபாஸ் இச்செய்தியை காந்தியிடம் கூறினார். காந்தியின் லண்டன் பயணம் சரியாக ஆலோசிக்காமல் திட்டமிடப்பட்டுவிட்டது என சுபாஸ் கூறினார்.
- காந்தி மாநாடு முடிந்து இந்தியா வந்தார். சுபாஸ் இந்த மாநாட்டில் காந்தி எதையும் சாதிக்கவில்லை என நினைத்தார்.
- சுபாஸ் மத்திய பகுதி கூட்டத்திற்கு தலைமை தாங்கி பேசினார். கல்கத்தா மாநாட்டுக்கு தலைமை தாங்கி பேசினார். டெல்லியில் அகில இந்திய வர்த்தக சங்க மாநாட்டில் தலைமை உரையாற்றினார்.
- 1932 –ல் ஆங்கில அரசு சுபாஸ் உட்பட அனைத்து காங்கிரஸ் தலைவர்களையும் கைது செய்தது.
- ஆங்கில அரசு கமியுனல் அவார்ட் என்ற திட்டத்தை அறிவித்தது. இதன்படி ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், மற்ற சிறுபான்மையினருக்கும் இட ஒதுக்கீடு வழங்கியது. இதை காந்தி எதிர்த்து ஏர்வாட சிறையில் இறக்கும் வரை உண்ணாவிரதத்தை துவங்கினார்.
- பிறகு காந்தியும் அம்பேத்காரும் பேசி பூனா ஒப்பந்தம் செய்தனர். காந்தி உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.
- இந்த நிகழ்வு சுபாஸை கோபம் அடைய செய்தது. தேவை இல்லாமல் சுதந்திரப் போராட்ட வேகத்தை பூனா ஒப்பந்தம் திசை திருப்பி காந்தி உண்ணாவிரதம் என்ற பாதை மாறுகின்றது என்று வருந்தினர்.
- காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்திலிருந்து விலகி தீண்டாமை ஒழிப்பு, கோயில் நுழைவுப் போராட்டம் என்ற பாதையில் செல்வதை சுபாஸ் விரும்பவில்லை.
- சிறைசாலையில் சுபாஸ் உடல் நலம் பாதித்தது. அடிக்கடி சிறைச்சாலை மாற்றியதாலும், முதலில் மதராஸ் சிறை பின்பு பவானி சிறை பின்பு லக்னோ சிறை என மாற்றினார்.
- 1933-ல் சுபாஸ் ஐரோப்பாவில் மருத்துவம் செய்ய அனுமதிக்கப்பட்டார். வியன்னா சென்றார். சுபாஸ் காந்தி உண்ணா விரதத்தை விமர்சனம் செய்ததால், இந்தியா வந்த சுபாஸ்

அரசியல் மாநாட்டுக்கு தலைமை தாங்க லண்டனில் அழைப்பு வந்தது. ஆனால் சுபாஸ் நேரில் செல்லாமல் தனது தலைமை உரையை மட்டு அனுப்பினார்.

## ➢ சுபாஸ் வெளிநாடுகளில் இந்திய தூதுவர் போல் செயல்பட்டார் (1933-1936)

- சுபாஸ் தானாக இந்தியாவின் தேசிய உணர்வை வளர்க்க வெளிநாடுகளில் செயல்பட்டார். சுபாஸ் ஆஸ்திரியா, செக்கஸ்லோவியா, போலாந்த், ஹங்கேரி, இத்தாலி, சுவிசர்லாந்து, ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு சென்றார்.
- சுபாஸ் பல ஐரோப்பிய கல்வியாளரிடமும், எழுத்தாளரிடமும் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார்.
- பல மாநாட்டுகளில் மேல்நாட்டில் இந்தியாவின், வரலாறு, நாகரீகம், கலாச்சாரம் பற்றி சுபாஸ் பேசினார்.
- இதனால் மேலை நாடுகள் சுபாஸின் சுதந்திர போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.
- 1934-ல் சுபாஸ் வியன்னாவில் ஆஸ்திரியா-இந்திய சங்கம் உருவாக்கினார்.
- பெர்லினில் இந்திய மற்றும் ஜெர்மனி சங்கம் சுபாஸை அதிகார பூர்வமாக ஜெர்மனி வெளிநாட்டுத் துறை அதிகாரத்தை பேச அனுமதி பெற்று தந்தது.
- சுபாஸ் இந்தியர்கள் ஜெர்மனியில் பணிபுரிவோரிடமும் உறவு வைத்துக் கொண்டார்.
- சுபாஸ் துருக்கியும், இந்தியாவும் பல பொது வழிகளில் ஒன்றுப்பட்டு உள்ளதால் இணைந்து செயல்படலாம் என கூறினார்.
- சுபாஸ் ஐரோப்பியாவில் இருக்கும் போது இந்திய சுதந்திர போராட்ட வரலாற்றை புத்தகமாக எழுதினார்.
- சுபாஸ் ஐரோப்பிய புரட்சியை படித்து எப்படி ஆங்கிலேயரின் எதிரியான ஜெர்மனியிடம் உதவி பெற்றனர் என்று அறிந்துக் கொண்டார்.
- சுபாஸ் ஐயர்லாந்திலிருந்து உலக நாடுகளுக்கு இந்திய சுதந்திரப் போராட்டத்தை அரிய ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மனி மொழிகளில் இதழ்களை வெளியிட்டார்.
- சுபாஸ் 1935-ல் ஒரு பெரிய அறுவை சிகிச்சையை செய்துக் கொண்டார்.

## ➢ சுபாஸ் காங்கிரஸ் தலைவர் (பகுதி I)

- சுபாஸ் குடிபெயருதலின் வாழ்க்கை வரலாற்றை இந்தியர் புனித பயணம் என்ற பெயரில் எழுதினார்.
- பிப்ரவரி 1938-ல் அரிபுரா காங்கிரஸ் மாநாட்டில் சுபாஸ் கலந்துக் கொண்டார். சுபாஸை 51 ஜோடி வெள்ளை காளைகள் உள்ள வண்டியில் அழைத்து சென்றனர். இதில் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## ➢ சுபாஸ் காங்கிரஸ் தலைவர் (பகுதி II)

I. சுபாஸ் காங்கிரஸ் இயக்கத்தில் சில உறுதியான முடிவுகளை செயல்படுத்தினார். காங்கரஸில் ஒழுக்கமுள்ள படை வேண்டும்.
II. காங்கிரஸ் சுதந்திரம் அடைந்த பின்பு சமூகப் பணி செய்ய அதிகார பிரிவு வேண்டும்.
III. வர்த்தக மக்களும், விவசாயிகளும் முழுமையாக காங்கிரஸில் இனைய வேண்டும்.
IV. காங்கிரஸில் இடதுசாரி பிரிவு சோசியலிஸ்ட்களாக இருக்க வேண்டும்.
V. சுதந்திரமான வெளிநாட்டு கொள்கை இந்தியாவிற்கு வேண்டும்.
VI. உலக அளவில் இந்தியா கலாச்சார மற்றும் கல்வி தொடர்பு ஏற்படுத்த வேண்டும்.

- இரண்டாவது முறை தலைவரானதும் சுபாஸ் நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்தார்.
- சுபாஸ் நாட்டை மறுகட்டமைப்பில் தெளிவாக முடிவு செய்தார்.
- சுபாஸ் காங்கிரஸ்காரர்கள் தங்கள் பொறுப்புக்களையும், பணிகளையும் நன்கு அறிந்திருக்க வேண்டும். இது நாட்டின் ஒற்றுமைக்கும் முழு வளர்ச்சிக்கும் பயன்படுத்த வேண்டும்.
- சுபாஸ் தொழில் வளர்ச்சியின் போது உள்நாட்டு தொழில்களும் இணைந்து வளர வேண்டும் என்றார்.
- சுபாஸ் 1939-ல் வார்தா ஆசிரமத்தில் காந்தியை சந்தித்துப் பேசினார்.

- மாற்று தலைமை
- காந்தி சுபாஸிற்கு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை. எனவே, சுபாஸ் காங்கிரஸ் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார்.
- 1939 ஜுன் 22-ல் பம்பாய் முதல் ∴பார்வர்ட் பிளாக் கட்சியை துவக்கிய சுபாஸ் அதன் மாநாட்டை நடத்தினார்.
- சுபாஸ் ∴பார்வர்ட் பிளாக் என்ற வார இதழை துவங்கி நடத்தினார்.

➢ **பெரும் தப்பித்தல்**

- சுபாஸ் இந்தியாவிலிருந்து தப்பிக்க திட்டமிட்டார். டெல்லியிலிருந்து ரயில் மூலம் பேஷ்வார் சென்றார். 1941 –க்கு பிறகு என்ன நடந்தது என்ற முழு உண்மை விவரம் கிடைக்கவில்லை.

➢ **ஆசாத் இந்த்**

- ஆங்கிலத்தில் சுபாஸ் ஜெர்மனியிலிருந்து ஆசாத் இந்த் என்ற இதழை துவங்கி நடத்தினார்.
- இது ஐரோப்பா முழுவதும் சென்றடைந்தது. இதில் சுபாஸ் இந்திய அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம், தத்துவம், கலை ஆகியவற்றை பற்றி எழுதினார்.

➢ **கிழக்கு ஆசியா (1943-1945)**

- 1943-ல் சுபாஸ் டோக்கியோவில் நடந்த கிழக்கு ஆசியா சபை கூட்டத்தில் பங்குப் பெற்றார்.
- இதில் பன்னாட்டு மாநாடு எப்படி நடக்கிறது என்று சுபாஸ் பார்வையிட்டார்.
- சுபாஸ் இதில் இந்தியாவின் திட்டம் பற்றி அவருடை கருத்தை எதையும் தெரிவிக்கவில்லை.

➢ **புறப்படு டெல்லியை நோக்கி**

- சுபாஸ் இந்திய தேசிய இராணுவ வீரர்களுடன் பேசினார். புறப்படுங்கள் டெல்லியை நோக்கி என்றும், இந்த பாதை உங்கள் முன்னோர்களால் உருவாக்கப்பட்டது.
- எதிரிகளிடம் இருந்து நம் வழியை பாதுகாக்க வேண்டும். இதில் நாம் வீர மரணம் அடைய நேரலாம்.
- இன்று கடைசி உறக்கம். இந்த சாலையை முத்தமிட்டுக்கொள் இது டெல்லியை சென்று சேர்க்கும்.
- இந்த ரோடு சுதந்திரம் பெற செல்லும் ரோடு, டெல்லியை நோக்கி புறப்படு என்றார்.

- இந்திய சுதந்திர போராட்டத்தில் சுபாஸ் மதிப்புக்குரிய இடம் பெற்றுள்ளார்.
- இவர் உடலாலும், உள்ளத்தாலும், செயலாலும், கொள்கையாலும் நாட்டுக்காக வாழ்ந்தார்.
- இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவின் சாதனைபுரிந்த மாமனிதர் சுபாஸ்சந்திர போஸ் ஆவார்.

# மௌலானா அபுல்கலாம் ஆசாத் (1888-1958)

- காந்தியின் காலத்தில் மௌலான அபுல்கலாம் ஆசாத் மிக முக்கிய அரசியல் தலைவர்களில் ஒருவர் ஆவார்.
- 1940 ஆம் ஆண்டு தேர்தலில் ஆசாத் எம்.என். ராய்யை தோற்கடித்தார். இதன் பிறகு ஆசாத் இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் தலைவரானார்.
- ஆசாத் தனது 35வது வயதில் டெல்லியில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் சிறப்பு கூட்டத்தின் தலைவராக தலமைதாங்கினார். செப்டம்பர் 15, 1923 ஆம் ஆண்டு இது நடந்தது.
- ஆசாத் இந்த நாட்டுக்காக அதிக கஷ்டங்களை அனுபவித்தார்.

- ஆசாத் அதிகம் கற்பவர். இவர் பயமில்லாதவர். நிகழ்காலத்திற்கும் கடந்தக் காலத்திற்கும் பாலமாக இருந்தார். இவர் பழைமைக்கும், நவீன அறிவியல் உலகுக்கும் இணைந்து பணியாற்றியவர்.

## ➢ ஆசாத் ஒரு பத்திரிக்கையாளர்

- ஆசாத் நைராங்-இ-ஆலம் என்றபத்திரிக்கையில் கவிதை எழுதினார். அஸ்-சபா என்ற பத்திரிக்கையிலும் கட்டுரை எழுதினார்.
- ஆசாத் தனது முதல் புத்தகமான எலன்-இ-ஹாக் என்ற பெயரில் வெளியிட்டார்.
- ஆசாத் தொடர்ந்து பல பத்திரிக்கைகளில் எழுதினார். இரண்டாவது லாகூரில் வெளிவரும் மேக்சான் பத்திரிக்கையிலும், கல்கத்தாவில் வெளிவரும் ஆசன்-உள்-ஆக்பர் என்ற பத்திரிக்கையிலும் மற்றும் முராக்கா-இ-ஆஸ்லாம் என்ற பத்திரிக்கையிலும் எழுதினார்.
- ஆசாத் செப்டம்பர் 20, 1903-ல் ஒரு பத்திரிக்கையை ஏற்படுத்தினார். லிக்கானு-எஸ்.சித்திக் என்ற பெயர் ஆகும்.
- ஆசாத் லாகூரில் ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் 3 ஆம் தேதி வரை 1904 –ல் நடைப்பெற்ற அஞ்சுமேன்-இ-இமயத்-இ-இஸ்லாம் என்ற மாநாட்டிலும் கலந்துக் கொண்டார்.
- ஆசாத் 1904 ஆம் ஆண்டு லக்னோவில் நடைப்பெற்ற இரண்டாவது இஸ்லாம் மாநாட்டில் பங்கு பெற்றார்.
- ஆசாத் 1906 ஆம் ஆண்டு டெல்லியில் உள்ள பத்திரிக்கை வாகில் அமிர்தசரஸ் பதிப்பாளர் பணியை ஏற்றுக் கொண்டார்.
- ஆசாத் டாரூ-எஸ்-சுல்தான் என்ற உள்ளூர் வாரந்திர இதழுக்கு எடிட்டராக பணிபுரிந்தார்.

## ➢ ஆசாத்தின் அரசியல் வாழ்வு

- காந்தி ஒத்துழையாமை இயக்கம் துவங்கிய போது ஆசாத் அவருடைய வலக்கரமாக செயல்பட்டார்.
- ஆசாத் ராஞ்சி சிறையிலிருந்து விடுதலை அடைந்ததும், காந்தியை சென்று சந்தித்தார்.
- லாகூரில் 1000 அறிஞர்களும் மௌலிகளும் ஒன்று சேர்ந்து ஆசாத் இந்தியாவின் தலைவர் என அறிவித்தனர். இமாம்-உள்-இந்து என்றனர்.
- டெல்லியில் 1923 செப்டம்பரில் சிறப்பு காங்கிரஸ் மாநாட்டுக்கு ஆசாத் தலைமை தாங்கினார்.
- இம்மாநாட்டில் இந்து முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்தி அனைவரும் இந்திய தேசிய இயக்கத்தை வலுப்படுத்த வேண்டும் என்று பேசினார்.
- 1927-ல் சைமன் குழுவை சாதிப்பதற்கு நடந்த கூட்டம் கல்கத்தாவில் ஆசாத் தலைமையில் நடைப்பெற்று இறுதியில் சைமன் குழுவை எதிர்ப்பது என முடிவு செய்யப்பட்டது.
- ஆசாத் 1928-ல் லாகூர், அமிர்த்தசரஸ், ராவல் பிண்டி, டெல்லி ஆகிய இடங்களுக்கு சென்று சைமன் குழு எதிர்ப்பதற்கான காரணங்களை விளக்கி பேசினார்.
- ஆசாத் பல இடங்களில் ஏற்பட்ட பிரச்சனைகளை தீர்த்து வைத்தார்.
- ஆசாத் பாராளுமன்ற குழுவில் வங்காளம், பீகார், உத்திரப்பிரதேசம், பஞ்சாப், சிந்து மற்றும் வடமேற்கு எல்லை மாகாணம் ஆகியவற்றிற்கு பொறுப்பாளராக இருந்தார்.

## ➢ ஆசாத் காங்கிரஸ் தலைவராக செயல்படுதல்

- 1923-ல் டெல்லியில் நடந்த சிறப்பு காங்கிரஸ் கூட்டத்தில் ஆசாத் முதன்முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ஆசாத் மீண்டும் இரண்டாவது முறையாக 1939-ல் காங்கிரஸ் இயக்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1940-ல் பீகாரில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தின் தலைவர் உரையாக ஆசாத் பேசியது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.
- ஆசாத் ஆங்கில ஆட்சியிடம், இந்தியாவிற்கு முழு சுதந்திரமும், அரசியலமைப்பு சட்டசபையும் வேண்டும் என்றார்.

- ஆசாத் இந்தியாவின் இக்கட்டான காலகட்டத்தில் இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக இருந்தார். சிறப்பாக 1940 முதல் 1946 வரை ஆசாத் இந்திய சுதந்திரம் பெற்றுவிடும் என்ற தலைப்பில் புத்தகம் எழுதினார்.
- 1942, மார்ச் 29 –ல் ஆசாத்துக்கும் கிரிப்ஸ் குழுவிற்கும் முதல் சந்திப்பு நடந்தது. இதன் முடிவில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டது. இதில் ஆசாத் ஜுலை 15, 1947 கல்வி அமைச்சரானார்.

➢ **மௌலான அபுல்கலாம் ஆசாத் கல்வி அமைச்சர் பணி**

- ஆசாத் 1952 தேர்தலில் லோக் சபைக்கு ராம்பூர் தொகுதியிலும் 1957 தேர்தலில் குர்கான் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- கல்வி அமைச்சருக்குரிய அறிவு, ஆற்றல், மனிதநேயம், மதிப்பு அனைத்தும் ஆசாத்திடம் இருந்தது.
- ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட கல்வி முறையை மாற்றி இந்தியாவின் சுய சிந்தனைக்கு ஏற்ப மாற்றினார்.
- ஆசாத் முதியோர் கல்வி முறையை ஏற்படுத்தினார். கல்வியில் ஆராய்ச்சியை ஊக்குவித்தார்.
- இந்தி வார்த்தைகளை அதிகம் உருவாக்கினார். தேசிய வளர்ச்சிக்கும், விழிப்புணர்வுக்கும் ஆண்கள் கல்வியுடன் பெண்கள் கல்வி மிகமிக முக்கியம் என்றார். ஆசாத் பல கல்விக் குழுக்களை ஏற்படுத்தினார்.
  1. இந்திய பல்கலைக்கழகம் குழு, 1948
  2. மேல்நிலைக் கல்வி குழு, 1952
  3. தோழில்நுட்ப கல்வி குழு நாடு முழுவதும் சோதனைக் கூட்டங்களை ஏற்படுத்தினார்.
  4. கராக்பூர் உயர் தொழில்நுட்ப நிறுவனம் உருவாக்கினார்.
  5. பல்கலைக்கழக மாணியக்குழு உருவாக்கினார்.
- ஆசாத் தொழில்நுட்ப கல்வி மிக அவசியம் இந்தியாவின் வளர்ச்சி என்றார்.
- ஆசாத்துக்கு முன் கல்விக்கு இரண்டு கோடி மட்டுமே நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கபட்டிருந்தது. இவர் 30 போடி ரூபாய் ஒதுக்கினார்.
- ஆசாத் ஐந்தாண்டு திட்டங்கள் மூலம் விவசாயம், தொழிற்சாலை, ஆற்றல், போக்குவரத்து, தாவல்தொடர்பு மட்டும் வளர்ந்தால் போதாது இளைஞர்களுக்கு நல்ல கல்வி கொடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தி நல்ல குடி மகனாக்க வேண்டும் என்றார்.
- ஆசாத் அக்டோபர் 19, 1945 தொழில்நுட்ப கல்விக்கு ஏற்படுத்திய சார்ஜன்ட் குழு அறிக்கையை ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தினார்.
- ஆசாத் ஆகஸ்டு 18, 1952 கராக்பூரில் தொழில்நுட்ப நிறுவனத்தை துவக்கி வைத்தார். ஆசாத் சாகித்ய அகாடமி, லலித் கலா அகாடமி, சங்கீத நாட்டிய அகாடமியை உருவாக்கினார்.
- இந்த மூன்று நிறுவனங்களுக்கு தனித்தனியே அரசு நிதி ஒதுக்கி சுதந்திரமாக செயல்பட ஆசாத் வழிவகுத்தார்.
- ஐநாவின் ஒரு உட்பிரிவான யுனஸ்கோ உருவாக்குவதில் இந்தியாவின் பங்கு உண்டு.
- இந்த யுனஸ்கோவில் இந்தியா உறுப்பிரனார். இந்தியாவில் இருந்து அதிக அளவு பேராசிரியர்களும், அறிஞர்களும் அதில் பங்கு பெற்றனர்.
- யுனஸ்கோவின் செயற்குழுவின் தலைவராக டாக்டர் ராதாகிருஷ்ணன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1952-ல் ஆசாத் யுனஸ்கோ கூட்டம் பாரிஸில் நடந்தது, அதில் சிறப்பாக பேசினார்.
- ஆசாத் இந்திய கலாச்சார குழு உருவாக்கினார். இதன் மூலம் இந்திய கலாச்சாரம் மற்ற நாடுகளில் பரவ வழிச் செய்தார்.
- ஆசாத் கல்வி அமைச்சர் பணியுடன், பாராளுமன்ற காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவராக இருந்தார். பிரதமரின் முதன்மை ஆலோசகராக செயல்பட்டார்.

➢ **ஆசாத் ஒரு சிறந்த அறிவாளி மற்றும் எழுத்தாளர்**

- ஆசாத் இரு பத்திரிக்கைகளில் எடிட்டராக பணிபுரிந்தார் அல்-இலால் மற்றும் அல்-பாலாஷ் ஆகும்.

- ஆசாத் எழுதிய தார்சுவன்-உள்-குரான் மற்றும் தஸ்கீரா மற்றும் குபார்-இ-காடிர் ஆகும்.
- ஆசாத் பல துறை ஆற்றல் பெற்றருந்தார். குரான் பற்றி தெளிவாக எழுதினார், பேசினார். அது மனிதர் வாழ்வுக்கு வழிகாட்டி என்றார்.
- ஆசாத்தின் வழிக்காட்டி ஷா வாலியுள்ளா ஆவார். மேலும், ஆசாத்திற்கு வழிகாட்டி இமாம் காஜாலிஸ் ஆவார்.
- ஆசாத் குரானை தெளிவாக படித்து தெளிவான சிந்தனையை வளர்த்துக்கொண்டு அதன்படி வாழ்ந்தார்.

- மௌலான அபுல் கலாம் ஆசாத் தெளிவான சிந்தனையும், தூய்மையான இதயமும் பெற்றிருந்தார்.
- ஆசாத் நல்ல உடல் வளம் மற்றும் சமநிலையையும், மனநிலைமையையும், உயர்வான கருத்துக்களையும் கூறுபவராகவும் திகழ்ந்தார்.
- ஆசாத்தின் எழுத்து, பேச்சு, திறமையின் மூலம் அவரது அறிவு ஆற்றல் வெளிப்பட்டது.
- ஆசாத் நேர்மையான, தூய்மையான அரசியலில் ஈடுப்பட்டதால் லட்சக்கணக்கான மக்களிடம் புகழ் பெற்றிருந்தார்.
- ஆசாத் முஸ்லீம்களின் வளர்ச்சிக்கு பாடுபட்டு அவர்களுக்கு வழிகாட்டினார்.
- ஆசாத் எல்லா பிரச்சனைகளையும் மறு அனுகுமுறை மூலம் சரிச்செய்தார்.
- ஆசாத் அறிவாளி, கவிஞர், இசையமைப்பாளர், ஓவியர் அத்துடன் நீச்சல் வீரர்.
- ஆசாத் அறிவாளியாகவும் சிறந்த அரசியல்வாதியாகவும் வாழ்ந்தார்.

APOLLO STUDY CENTRE

# டாக்டர் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர் (1891-1956)

- போதிசத்துவா பீமாராவ் அம்பேத்கார் ஏப்ரல் 14, 1891 பிறந்தார். இவரை பாபாசாகிப் என்றும் அழைப்பார்கள். இவர் ஒரு வழக்கறிஞர், அரசியல் தலைவர், சிந்தனையாளர், மானுடவியல் அறிஞர், வரலாற்று ஆசிரியர், பேச்சாளர் சிறப்பான எழுத்தாளர், பொருளாதார மேதை, அறிவாளி, பத்திரைக்கையாளர், புரட்சியாளர் மற்றும் இந்தியாவில் மீண்டும் புத்தமத மறுமலர்ச்சிபெற வழிவகுத்தவர்.

➢ **ஆரம்பக்கால வாழ்வும், கல்வியும்**

- இன்றைக்கு மத்திய பிரதேசத்தில் உள்ள மாவ் என்ற இராணுவ கண்டோன்மன்ட் இடத்தில் அம்பேத்கர் பிறந்தார்.
- இவரது பெற்றோர் ராம்ஜி மலோஜி சக்பால் மற்றும் பீமாபாய் ஆவார்கள். இவர்களும் கடைசியும் மற்றும் 14வது குழந்தையாக அம்பேத்கர் பிறந்தார்.
- இன்றைக்கு மகாராஷ்டிர மாகாணத்தில் உள்ள ரத்தினகிரி மாவட்டத்தில் அம்பவாடே கிராமத்தில் மராத்திய பின்னனியை சேர்ந்தவர் அம்பேத்கர்.

➢ **அம்பேத்காரும் அவரது கல்வித்தகுதியும்**

- 1902 – மகாராஷ்டிராவில் சத்தாராவில் தொடக்கக்கல்வி
- 1907 – நடுநிலைப்பள்ளி, பம்பாய்
- 1909 - இன்டர் - பம்பாய்
- 1913 – இளங்கலை பொருளாதாரம் மற்றும் அரசியல் அறிவியல்
- 1915- முதுகலை பொருளாதாரம்
- 1917 – முனைவர் பட்டம், கொலம்பியா பல்கலைக்கழகம், அமெரிக்கா
- 1921 – முதுகலை, பொருளாதாரம், லண்டன் பொறியியல் கல்லூரி
- 1920 – சட்டப்படிப்பு
- 1923 – DSC பொருளாதாரம்
- 1952 – LLD, கொலம்பியா பல்கலைக்கழகம்
- 1953 – D.Litt ஒஸ்மானியா பல்கலைக்கழகம்
- 2015 – கொலம்பியா பல்கலைக்கழகத்தின் உலகின் மிகச்சிறந்த அறிஞர் பட்டம்

➢ **அம்பேத்கர் பணிகள் (தீண்டாமைக்க எதிராக)**

- அம்பேத்கர் கெயிக்வாட்பரோட மன்னரிடம் இராணுவ செயலாளராக பணியில் சேர்ந்தார். ஆனால், சாதி கொடுமையால் பணியை துறந்தார்.
- அம்பேத்கர் தனியாக பாடம் கற்பிப்பவராக பணிபுரிந்தார். வியாபாரிகளுக்கு ஆலோசகராக பணிபுரிந்தார். இதிலும் சாதி கொடுமை இருந்தது.
- அம்பேத்கர் பம்பாயில் சவுத்பிரோ குழுவில் பணிபுரிந்தார். இதனால் 1919 ஆம் ஆண்டு சட்டம் வெளிவந்தது.
- இந்த குழுவில் அம்பேத்கர் தீண்டப்படாதவர்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் தனித் தொகுதியை கேட்டார்.
- அம்பேத்கர் 1920 ஊமைகளின் தலைவன் என்ற பெயரில் வாரஇதழை துவங்கினார். இதற்கு கொல்காபூர் மகாராஜா முதலாம் சாகு உதவினர்.
- இதில் அம்பேத்கர் இந்துமதத்தை கடுமையாக விமர்சித்தார். சாதி வேறுபாட்டை காட்டும் அரசியல்வாதிகளை சாடினார்.
- அம்பேத்கர் 1922 லண்டன் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். பின்னர் சட்டம்பயின்று பாரட்லா பட்டம் பெற்றார்.

APPOLLO STUDY CENTRE

## ➢ அம்பேத்கர் அரசியல் பணி

- அம்பேத்கர் 1935 பம்பாயில் உள்ள சட்ட அரசு கல்லூரியின் முதல்வராக பணியேற்றார்.
- அம்பேத்கர் பம்பாயில் வீடுகட்டி அதில் 50,000 புத்தகங்களைக் கொண்ட நூலகம் உருவாக்கினார். இங்கு அவரது மனைவி ராமாபாய் இறந்துவிட்டார். இவருக்கு யஸ்வந்து என்ற மகன் உண்டு.
- 1936 –ல் அம்பேத்கர் சுதந்திர தொழிலாளர் கட்சி துவங்கினார். இக்கட்சி 1937 தேர்தலில் போட்டி இட்டு 15 இடங்களில் மையச்சட்ட சபைக்கு வெற்றி பெற்றது.
- அம்பேத்கர் வைஸ்ராய் ஆட்சிக் குழுவில் இராணுவ ஆலோசகராகவும் பிறகு தொழிலாளர் அமைச்சராகவும் பணியாற்றினார்.
- அம்பேத்கர் தனது அரசியல் கட்சியை அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் கூட்டமைப்பு என்று மாற்றினார். 1946 தேர்தலில் அதிக ஆர்வம் காட்டவில்லை.
- அம்பேத்கர் 1941 முதல் 1945 வரை அதிகமாக புத்தகங்கள், ஆண்டு பிரசுரம், பாகிஸ்தானின் பிரிவு பற்றியும் எழுதினார்.

## ➢ அரசியலமைப்பு எழுத்துப்பணி

- இந்தியா 1947 ஆகஸ்டு 15 சுதந்திரம் அடைந்தது. புதிய காங்கிரஸ் கட்சி அரசு அமைத்தது. அம்பேத்காரை முதல் சட்ட அமைச்சராக நியமித்தது. நேருஜி பிரதமர் ஆனார்.
- அம்பேத்கர் இந்திய அரசியலமைப்பு எழுதும் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். அம்பேத்கர் இப்பணியை சிறப்பாக செய்து முடித்து அனைவரின் பாராட்டை பெற்றார்.
- அம்பேத்கர் அரசியலமைப்பில் சிவில் சுதந்திரம், தனிமனித உரிமை, மத சுதந்திரம், தீண்டாமை ஒழிப்பு எழுதினார்.
- அம்பேத்கர் பெண்களுக்கான பொருளாதார சமூக உரிமைக்காக போராடினர். அரசியலமைப்பில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்களுக்கு இட ஒதுக்கீடு பெற்று தந்தார்.
- சபையில் அரசியலமைப்பை அம்பேத்கர் நவம்பர் 26, 1949 சமர்பித்தார். அம்பேத்கர் கொண்டு வந்து இந்து மசோதா அனைவராலும் எதிர்த்ததால் தனது பதவியை 1951 ராஜினாமா செய்தார்.
- இச்சட்டத்தில் பெண்களுக்கு பொருளாதாரம் மற்றும் திருமண உரிமைகளை கேட்டார்.
- அம்பேத்கர் சுயாட்சி வேட்பாளராக 1952 லோக்சபா தேர்தலில் நின்று தோற்றார். பிறகு ராஜ்ய சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். இறக்கும் வரை அதில் இருந்தார்.

## ➢ Dr. அம்பேத்கர் புத்த மதத்தில் சேருதல்

- பண்டைய காலத்தில் மகர் மக்கள் புத்த சமயத்தை பின்பற்றியவர்களே, என மானுடவியல் அறிஞரான அம்பேத்கர் கண்டுக் கொண்டார்.
- இவர்கள் கட்டாயப்படுத்தி ஊருக்கு வெளியே வாழ வைத்தனர். ஆனாலும் அவர்கள் தொடர்ந்து புத்த சமயத்தை பின்பற்றியதால் இந்துக்களை மகர்களை தீண்டப்படாதவராக்கிவிட்டனர்.
- அம்பேத்கர் புத்தசமய வரலாற்றை முழுவதுமாக படித்து விட்டார். 1950லிருந்து பல புத்த மாநாடுகளுக்கு சென்று பேசினார்.
- ஸ்ரீலங்காவிற்கு சென்று புத்த சமய துறவிகளையும் அறிஞர்களையும் கண்டு பேசினார்.
- அம்பேத்கர் பர்மாவிற்கு 2 முறை சென்றார். ரங்கூனில் நடந்த மூன்றாவது உலக புத்த சமய மாநாட்டில் கலந்துக் கொண்டார்.
- அம்பேத்கர் 1955 இந்தியாவின் புத்த சங்கம் உருவாக்கினார். புத்தாவும் அவருடைய தம்மாவும் என்ற தலைப்பில் புத்தகம் எழுதினார்.
- அம்பேத்கர் 1956 அக்டோபர் 14 ஆம் தேதி 5 லட்சம் தாழ்த்தப்பட்டோருடன் நாக்பூரில் உள்ள தீட்சா பூமி என்ற இடத்தில் புத்த சமயத்திற்கு மாறினார்.
- Dr. அம்பேத்கர் பின்பு நேபாளில் உள்ள காத்மண்டுவிற்கு சென்று நான்காவது உலக புத்த மாநாட்டில் கலந்துக் கொண்டார்.

- அம்பேத்கர் புத்தரும் காரல்மார்க்ஸ் என்ற புத்தகம் எழுதினார். பண்டைய இந்தியாவில் ஏற்பட்ட புரட்சியும், எதிரி புரட்சியும் பற்றி எழுதினார்.
- அம்பேத்கர் கருத்துப்படி இந்துமதம் நான்கு வர்ணங்கள் அல்லது சதுர்வர்னம் மூலம் உருவாக்கி சமத்துவ இன்மையை உருவாக்கிவிட்டது என்றார்.
- இதனால் தான் சாதி முறை, தீண்டாமை உருவானது என்றார்.
- அம்பேத்கர் காந்தியின் செயல்பாடு குறித்து இரண்டாவது வட்டமேஜை கூட்டத்தில் கூறினார்.
- அம்பேத்கர் தீண்டப்படாதவர்களுக்கு அரசியலமைப்பில் உள்ள சலுகைகளை நினைத்து திருப்தி அடையவில்லை.
- அம்பேத்கர் தீண்டப்படாதோருக்கு ரட்சகர் இவர் டிசம்பர் 6, 1956 காலமானார்.
- அம்பேத்கர் டெல்லியில் வாழ்ந்த இடம் நினைவிடமாக்கப்பட்டது.
- அவரது பிறந்த நாள் அரசு விடுமுறை விட்டது. இவருக்கு 1990- ஆம் ஆண்டு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.

- நவீன இந்தியாவில் அரசியல் பிரிவும் அம்பேத்கர் முக்கிய இடம் பெற்றார்.
- அம்பேத்கரின் அறிவு, ஆற்றல், திறமை, தலைமை, தாழ்த்தப்பட்டோருக்கும் பயன்பட்டது.
- அம்பேத்கர் மதுஸ்மிரிதிக்கு எதிராக போர் நடத்தினார்.

# சர்தார் வல்லபாய் பட்டேல்

**வல்லபாய் பட்டேல் (அக்டோபர் 31, 1875 – டிசம்பர் 15, 1950)**

இந்திய அரசியல் மற்றும் சமூகத் தலைவர். நாட்டின் சுதந்திர போராட்டத்தில் முக்கிய பங்காற்றியவர் மற்றும் இன்றைய ஒருங்கிணைந்த, சுதந்திர இந்தியாவை ஒருங்கிணைத்த சிற்பியாவார். இவர் இந்தியாவின் இரும்பு மனிதர் என அழைக்கப்படுகிறார் மற்றும் இந்தியாவின் பல மொழிகளில் ‘‘முதல்வர்’’ (அ) ‘‘தலைவர்’’ என பொருள்படக்கூடிய ‘‘சர்தார்’’ எனவும் அறியப்படுகிறார்.

வல்லபாய் பட்டேல் அவர்கள் மகாத்மா காந்தியின் பணி மற்றும் அவரின் கொள்கைகளால் முதலில் ஈர்க்கப்பட்டு, ஒரு வழக்கறிஞராக நடைமுறை பயிற்சியில் வெள்ளியாளராகவும் திகழ்ந்தார்.

இவர் குஜராத்திலுள்ள கேதா, போர்சாத் மற்றும் பர்தோலி என்ற இடங்களில் பிரிட்டிஸ் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட அடக்குமுறை கொள்கைகளை எதிர்த்து விவசாயிகளுக்காக சத்தியாகிரக போராட்டத்தை நடத்தினார். இப்போராட்டத்தின் வெற்றியால் குஜராத்தில் இவர் மிகவும் செல்வாக்கு மிக்க தலைவர்களில் ஒருவராக கருதப்பட்டார்.

மேலும் இவர் இந்திய தேசிய காங்கிரசின் தலைவராகவும், போராட்ட கிளர்ச்சிகள் மற்றும் அரசியல் நிகழ்வுகளில் முன்னணியாளராகவும், 1934, 1937 தேர்தலுக்காக கட்சிகளை உருவாக்கினார் மற்றும் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை ஊக்கப்படுத்தினார்.

இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சராகவும் மற்றும் துணை பிரதம அமைச்சராகவும் இருந்த பட்டேல் பஞ்சாப் மற்றும் டெல்லியிலுள்ள அகதிகளுக்காக மீட்பு நிவாரணங்களை ஏற்பாடு செய்தார் மற்றும் நாடு முழுவதும் அமைதியை கொண்டுவர முயற்சித்தார். பட்டேல் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் இருந்த மாகாண பகுதிகள் மற்றும் 565 மன்னராட்சி ராஜ்ஜியங்களை ஒன்றிணைத்தார். இராணுவ நடவடிக்கையின் உதவியுடன் வெளிப்படையான இராஜதந்திரத்தை பயன்படுத்தி பட்டேலின் தலைமை, ஒவ்வொரு சுதேச அரசுகளின் இணைப்பையும் செயல்படுத்தியது. இந்தியாவின் இரும்பு மனிதராக பாராட்டப்பட்டவர், நவீன அனைத்திந்திய பணிகளை நிறுவியதற்காக இந்திய குடிமைப்பணியாளர்களின் ‘புனிதத் துறவி’ ஆக நினைவு கூறப்படுகிறார். பட்டேல் இந்தியாவில் சொத்து உரிமைகள் மற்றும் இலவச தொழில்களின் முன்னோடி ஆதரவாளர்களில் ஒருவராவர்.

 PH: 044-24339436, 42867555, 9840226187

**சூராஜ் சாம்பியன்**

சர்தார் வல்லபாய் பட்டேல் இந்தியாவின் ஒற்றுமைக்காக ஆற்றிய பங்களிப்பானது, அவரின் பன்முக தலைமைத்துவங்களில் ஒன்றாகும்.

சுதந்திரத்திற்கு பிந்தைய இந்தியாவை உருவாக்குவதில் நல்ல ஆளுமை என பொருள்படக்கூடிய "சூராஜ்" பயிற்சியில் அவரின் நோக்கம் இருந்தது. மேலும் இவர் இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சராகவும் மற்றும் இந்தியாவின் முதல் துணை பிரதம அமைச்சராகவும் பணியாற்றினார். எப்போதும் ஒற்றுமைக்காக வேரூன்றி, இந்திய விவசாயிகளின் சமூகத்தை ஒருங்கிணைப்பதில் அவர் ஒரு கருவியாக இருந்தார். மேலும் சுதந்திர சாம்ராஜ்யத்தில் பல்வேறு சாதியினரையும் சமூகங்களையும் ஒன்றாக இணைக்கவும் பாடுபட்டார்.

**சுதந்திர போராட்ட களம்**

சர்தார் வல்லபாய் பட்டேல், கோத்ரா சந்திப்பின்போது மகாத்மா காந்தியை சந்தித்தார். அப்போது அவரின் போராட்ட கொள்கைகளால் ஈர்க்கப்பட்டார். அன்றிலிருந்து இருவரும் நண்பர்களாகினர் மற்றும் காந்தியடிகளின் நடிவடிக்கைகளில் குறிப்பாக சம்பரான் சத்தியாகிரக வெற்றியை பின்பற்றி பட்டேல் போராட்டத்தை தொடங்கினார்.

1918ல் சர்தார், வெள்ளம் மற்றும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட கேதா சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபட்டார். இக்கடுமையான பஞ்சத்தில் பயிர்கள் பாதிக்கப்பட்டதால் பிரிட்டிஷ் அரசாங்கம் அபரிவிதமான வரிகளை விவசாயிகளின் மீது விதித்தது.

மேலும் இவ்வரிவிதிப்பு பலனளிக்கவில்லை. இதிலிருந்து விவசாயிகளை மீட்பதற்காக கேதா போராட்டத்தில் கவனத்தை ஈர்ப்பதற்காக காந்தியடிகளுடன் பங்குபெற்று போராட்டத்தை வெற்றிபெற செய்தார்.

ஒத்துழையாமை இயக்கத்தில், காந்தியின் அழைப்பை ஏற்று போராட்டத்தில் கலந்துகொண்டார். அதற்கு முன்பே தனது வழக்கறிஞர் தொழிலையும் இராஜினாமா செய்தார்.

**நகராட்சி தலைவர்**

சர்தார், அகமதாபாத் நகரின் நிர்வாகத்தில் தூய்மையான மற்றும் திட்டமிடப்பட்ட நிர்வாக கொள்கைகளை கொண்டு பங்காற்றினார். சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டதை தொடர்ந்து 1917ல் அகமதாபாத்தின் துப்பரவு ஆணையராக தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும், இவர் 1922, 1924 மற்றும் 1927ல் அகமதாபாத்தின் நகராட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். சர்தார் அவரின் சட்ட நடைமுறைகளின்படி அகமதாபாத்தில் மின்சார வழங்கலின் நீட்டிப்பு மற்றும் சில முக்கிய கல்வி சீர்திருத்தங்களையும் கொண்டுவந்தார்.

**சுதந்திர போராட்டத்தில் சர்தாரின் பங்கு**

1928ல் கேதா சத்தியாகிரக போராட்டத்தின் வெற்றிக்கு பிறகு, குஜராத்தின் பர்தோலி தாலுகா முக்கிய இயற்கை பேரழிவுகளால் பாதிக்கப்பட்டது. அப்போது பிரிட்டிஷ் அரசாங்கம் விவசாயிகளின் மீது கடுமையான வரியை விதித்தது.

சர்தார் விவசாயிகளுக்காக மீண்டுமொரு போராட்டத்தை நடத்தினார். அப்போது விவசாயிகளை ஒரு பைசாவும் அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டாம் என கூறினார். பின்னர் சர்தாரின் கோரிக்கையை ஏற்று அரசாங்கம் வரிவிதிப்பை குறைத்தது.

1930ல் சத்தியாகிரக பேராட்டத்தை தொடர்ந்து சர்தார் கைது செய்யப்பட்டார். பின்னர், அவர் விடுவிக்கப்பட்டார் மற்றும் 1931 கராச்சி காங்கிரஸ் மாநாட்டின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆகஸ்ட் 1942ல் இந்திய தேசிய காங்கிரசில் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை தொடங்கி அதைத்தொடர்ந்து சர்தார் பட்டேலுடன் சேர்த்து மற்ற போராட்ட வீரர்களும் மூன்று ஆண்டுகளுக்கு சிறையில் அடைக்கப்பட்டார்.

**ஒருங்கிணைந்த இந்தியாவை உருவாக்கல்**

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு பல்வேறு வகையாக பிரிந்து கிடந்த 565 சமஸ்தானங்களை ஒன்றிணைத்து ஒருங்கிணைந்த இந்தியாவை உருவாக்கி இந்தியாவின் இரும்பு மனிதர் எனவும் இந்தியாவின் பிஸ்மார்க் எனவும் பெயர் பெற்றார். இவை மட்டுமின்றி இந்திய ஆட்சிப்பணியை உருவாக்கி இந்திய ஆட்சிப்பணியின் தந்தை எனவும் பெயர் பெற்றார்.

**முக்கிய குறிப்புகள்**

- ✓ முதல் போராட்டம் - கேதா சத்தியாகிகரம்
- ✓ 1924 – 28 – அகமதாபாத் நகராட்சி தலைவர்
- ✓ 1928 – பர்தோலி சத்தியாகிரக பேராட்டம்
- ✓ 1931 – கராச்சி மாநாட்டின் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர்
- ✓ 1947 - இந்தியாவின் முதல் துணைப்பிரதமர்
- ✓ 1947 – உள்துறை அமைச்சர், தகவல்துறை அமைச்சர்
- ✓ 1991 – பாரத ரத்னா விருது

APOLLO STUDY CENTRE

**APPOLO STUDY CENTRE**
**No.25, Nandhi Loop Street,**
**West C.I.T. Nagar, Chennai – 600 035**
**Near T.Nagar Bus Stand,**
**Landmark: Nandhi Statue**
**Ph: 24339436, 42867555, 9840226187**
**E-mail: appolotnpsc@gmail.com**
**Website: www.appolosupport.com**
**www.appolotraining.com**